எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று கொட்டுமுரசே!

கோவை முரசு

கோவை முரசு, வெளியீடு: ஆசிரியை S. P. மீனாட்சி அம்மாள்..

சென்னை மேயர் அவர்கள்

ர் 1 ழ் 12	ஜனவரி & பிப்ரவரி '49.	விலை அணா 8.

சினிமா அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த படம்

கோவை, ஷண்முகா தியேட்டரில்

4-2-49 முதல்

நல்லதம்பி

கண்டு களியுங்கள்.

கதை—வசனம்
சி. என். அண்ணாத்துரை

பாடல்கள்
உடுமலை நாராயண கவி

நடிகர்கள்

N. S. கிருஷ்ணன்
சகஸ்ரநாமம்

T. A. மதுரம்
பானுமதி

எழுது அடுத்த படம்: ஸ்ரீ ஆண்டாள்

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு

விநியோக உரிமை :— ரேவதி பிலிம்ஸ் லிமிடெட்,
156, ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி.

பிப்ரவரி 25 தேதியன்று வெள்ளித்திரைக்கு விஜயம் செய்கிறுள்!

வேலைக்காரி

கதை. வசனம்: ஸி.என். அண்ணுத்துரை · டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி

எம்.வி.ராஜம்மா · வி.என். ஜானகி · கே. ஆர்.ராமஸ்வாமி
டி.எஸ்.பாலையா நடித்தது · நடனங்கள் · லலிதா-பத்மினி

சீக்கிரமே வெளிவருகிறது

தந்தி: 'வசந்தா' கோயமுத்தூர். போன்: நெ 25

வசந்தா மில்ஸ்
லிமிடெட்.

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்;

R. K. ஷண்முகம் செட்டி & பிரதர்ஸ்

1934-ஆ கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில்
நூல் ரகங்களுக்காக தங்கமெடல் நற்சாட்சி
பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை முறுக்கு,
காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங்,
மல், கதர் தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ லாங்கிளாத் மார்க்கெட்டில்
பேர் பெற்றது 600 நெ. காடா தயாரிக்கும்
உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

தந்தி : "பங்கஜா" போன் : 94.

பங்கஜா மில்ஸ்,

லிமிடெட்.

தபால்பெட்டி நெ. 150.

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : கோயமுத்தூர்.

கோயமுத்தூரில், பேர்பெற்றமில்களின் வரிசையில்சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

: ஸ்பின்னிங் :

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில்

டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது.

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி தரப்பட்டு வந்துள்ளது.

இந்திய முதல் இந்திய தொழிலாளர்

இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆதலால்

இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:—

C. S. RATNASABHAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE.

போன் : 70 தந்தி : "ஸ்பின்னிங்"

ஸ்பின்னிங் அண்டு வீவிங்
கம்பெனி லிமிடெட்,
கோயமுத்தூர்.

மூலதனம் ரூ. 25,00,000
வசூலான தொகை ரூ. 20,76,900

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால் நாயுடு
" G. புருஷோத்தம நாயுடு
" A. துரைசாமி நாயுடு
" ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
" சி. ஆர். சதாசிவம்
" ஆர். வி. லட்சுமைய நாயுடு
" R. குருசாமி நாயுடு

கதிர்கள் 47,992 **தறிகள் : 384**

நூல் : 80 நெ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் காரிகம், சலவை முதலிய எல்லா விதமான நூலும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்ட்டிங், லாங்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

சுதேச மூலதனம் தேசீயத் தொழில்
தேசீய நிர்வாகம்

Agents & Secretaries : M/s R. G. S. Naidu & Co.,
Partners :

V. Gopal Naidu & A. V. Srinivasalu Naidu,
COIMBATORE.

Phone { Office: 105
Residence: 47

SRI SARADA MILLS Ltd.,

PODANUR. (COIMBATORE)

★

MANAGING AGENTS & SECRETARIES

V. S. SENGOTTAIAH & BROS.

★

SPINDLES	14,000	Looms 170
"	7000 (Ordered further)	
YARN	From 10s to 60s (Special Counts) Single & Double Yarn.	
WEAVING	All kinds of Grey Long Cloth, Dhoties, Towels, Shirtings etc., are manufactured. Our special qualities are 1001 and 1011 Grey Long Cloth, which are noted for their excellence in quality.	

கோவை முரசுக்கு வாழ்த்து

Ripon Buildings,
MADRAS.
19---1---49.

S. Ramaswamy Naidu.

"கோவை முரசு" இதழ் ஒன்றைப் பார்த்தேன். பல கட்டுரைகள் நிறைந்து இருந்தன. தலையங்கத்தை ஊன்றிப் படித்தேன். அறிவுக்குப் பொருத்தமான முறையில் எழுதப் பெற்றிருந்தது. அறிவு, ஆற்றல், அனுபவம் எங்கு காணப் பெறுகின்றதோ, அதை நல்ல வழியிலே வற்புறுத்தி—வலியுறுத்திக் காட்டியிருக்கின்றார் ஆசிரியர்.

S. A. மாணிக்கம் அவர்கள் ஆசிரியராவர். இவர் தம்முடைய சீலமான தன்மையுடன் தமிழ்நாட்டிற்குப் பத்திரிகை வாயிலாக இலக்கியத்தைப் பெருக்கித் தரவேண்டும் என்பது என்னுடைய உண்மையான ஆசையாகும்.

கோவை முரசின் "ஒலி" நல்லெண்ணத்தைப் பரப்பவும், நல்ல ஒளியை அள்ளி வீசுதலும் வேண்டும். வெற்றிமேல் வெற்றி இட்ட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

சு. இராமசாமி நாயுடு,
சென்னை நகரசபை மேயர்.

கலைவாணன்
நகைச்சுவை அரசு
என். எஸ். கிருஷ்ணன்

போன் : 88223
6, வெங்கட்ராமையர் தெரு
தி. நகர், சென்னை.

12—1—49.

அன்புள்ள ஆசிரியருக்கு,

நலன். கோவையிலிருந்து மாதமொருமுறை கொட்டி முழக்கி வரும் "முரசு"க்கு பொங்கல் வாழ்த்து கூறுகிறேன். அறிவு ஓங்கவும், அறம் வளரவும், ஆண்மை பொலியவும் "கொட்டுக கோவை முரசு" என்று ஆசைப்படுகிறேன்.

பொங்கல் விழா தமிழரின் தனிப் பெருந் திருநாள். உழவர் பெருமக்களுக்கே உரித்தான திருநாள். உடல் தேய, உருக்குலைய உழைத்த உழவர்கள் தங்கள் உழைப்பின் பயனைக் காணும் திருநாள் இப் பொங்கல் நன்னாள். இன்று உலக வாழ்க்கைக்கே உறுதுணை செய்யும் இயற்கையன்னையின் எழிற் படைப்பாம் ஞாயிறை வணக்கம் செய்யும் நன்னாள். இந்நாளில் நாம் "முரசு" வாயிலாக தமிழ் மக்களுக்கு வணக்கமும் வாழ்த்தும் சமர்ப்பிக்கின்றோம்.

"பாலுப் பானை பொங்கவேணும்—மஞ்சத்
தாலிக் கவுர் தங்கவேணும்—உழுது
நாலு விதைச் சாலுவிட்டா
நாப்பதா மொளைச்சுவந்து
நல்ல குடி யோங்கவேணும்
பாடுபட்டோர் வாழவேணும்—பஞ்சப்
பட்டினியும் தாழவேணும்—தினம்
மாடு கட்டிக் காடுழுக மானம் பார்த்த சீமையிலே
மக்கள் குடி யோங்கவேணும்" என்று

மனமார பன்முறை வாழ்த்துகிறேன்.

அன்பன்,
N. S. கிருஷ்ணன்.

"கோவை முரசு"

சூலூர் P. O (கோவை ஜில்லா)

சந்தா விபரம்.

உள்நாடு தனிப்பிரதி	0—4—0	ஆண்டு சந்தா ரூ.	3—0—0
வெளிநாடு ,,	0—5—0	,,	4—0—0

விளம்பரம்.

வெளி அட்டை ரூ.	100-0-0	உள் அட்டை ரூ.	75-0-0
சாதா பக்கம் ரூ.	50-0-0	அரைப் பக்கம் ரூ.	25-0-0

பொங்கல் வாழ்த்து

ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா

சென்னை

6....1...49

அன்புடையீர், வணக்கம்.

"கோவை முரசு" பொங்கல் மலர் வெளியிடுவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் நாட்டில் தொழில் வளம் நிறைந்து விளங்கும் கோவை மாவட்டத்தின் பெருமையை "கோவை முரசு" தமிழ்நாடு முழுதும் ஒலிக்கட்டும். எனது இதயங் கனிந்த வாழ்த்து.

அன்பு,

டி. கே. ஷண்முகம்.

V. S. லஷ்மணன், போத்தனூர்
ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட் கோவை.

ஆசிரியர், கோவை முரசு கோயமுத்தூர்.

அன்புடை ஐயா;

மிகுந்த சந்தோஷத்துடன் தங்களின் கோவை முரசு சஞ்சிகையை வரவேற்கிறேன். நெடு நாட்களாக கோவைக்கு ஒரு நல்ல சஞ்சிகை தேவையென விழைந்தேன். அவ்விழைவை தங்களின் சஞ்சிகை பூர்த்தி செய்வதைக் கண்டு களிப்பெய்துகிறேன்.

வாசகர்கள் விரும்பும் சகல அம்சங்களையும் ஏற்றிருப்பதால் பத்திரிகை நன்கு வளர்ச்சியடையும்.

தங்கள் சஞ்சிகை வெற்றியடைய மனமுவந்து வாழ்த்துகிறேன்.

உண்மையுள்ள,

V. S. லக்ஷ்மணன்.

பொங்குது பாரடா!

(மா. நன்னன்)

★

பொங்குது பாரடா பொங்கற் சோறு!
பொங்குது பாரடா புதுத்திரு நாடு!!
செந்நெல் அரிசியும் சேதான் பாலும்
கன்னலும் பருப்பும் கமழ்நெய் யேனவும்
உண்பா ரிருந்தும் உரியா ரிருந்தும்
உணர்வா ரின்றியும் உரைப்பா ரின்றியும்
எரும்பும் ஈயும் அரும்பிட மொய்த்தென
அருந்தமிழ் நாட்டினை அயலோர் மொய்த்தனர்.
கண்டார் பெரியார்; கனன்றனர் எழுந்தார்;
அண்டை அயலுள அவையெலாம் சேர்த்தார்;
தன்மான மென்னுந் தாழியில் ஏற்றினர்;
தன்னறி வென்னுந் தழலினை மூட்டினர்
அழுகெலாம் நுரையென அகலுது காணடா!
வழுக்கென விழுங்கலாம்; வாயூற் றெடுக்குதோ?
ஆக்கப் பொறுத்தநாம் ஆறவும் பொறுப்போம்;
தேக்கொடுப் போம்பின்; திருநாடு காணடா!
பொங்குக! பொங்க லோவென,
எங்கும் எதிரொலி எழுப்படா தமிழா!

★

கோவை

முரசு

மலர் 1 | ஜனவரி 49 | 11, இதழ் 12.

பொங்கல் வாழ்த்து.

நமது ஆதரவாளர்களுக்கும், சந்தா நேயர்களுக்கும், ரசிகப் பொதுமக்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துகள்!

மைவழி நீங்க தையது பிறந்தது என்பது பழமொழி. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது இந்நாட்டு வழக்கச் சொல். உழுதூண் வினைஞர்கள் உவப்புறும் திங்கள் "தை". காலநிலை மாறுதலுற்று காசினி உவக்கும் நாள் முதன்முதல் துவக்குகிறதென மக்கள் களிப்படைந்து காலவெட்பத்தை தந்தருளிய காலை சூரியனுக்கு விழாச் செய்யும் பெருநாளைத் தமிழர் பொங்கல்நாளாகக் கொண்டாடுவது வெகு நாளைய வழக்கம். கன்னலும், செந்நெலும், முக்கனியும், பாலும், மஞ்சளும், தேங்கும், திருவிளக்கும் மங்கலப்பொருள்கள். அவற்றை வைத்து கதிர்க் கடவுளுக்குப் படைத்து பசியும், பயப் பிடையும் சாகடிக்க பூசனை புரிவது பழந் தமிழ்மரபு.

பொங்கல் புது நாள் தமிழகத்தில் படையெடுக்கிறது சென்ற ஆண்டு மிகச் சோதனையாக இருந்தது. போன பொங்கல் பிறந்த சிலதினங்களுக்குள் உலக உத்தமர், அதன்

பின்னர் வரிசையாக பல தலைவர்களை பொல்லாக்காலம் தனது கோரப் பற்களால் கிழித்தெறிந்தது. எத்தனையோ இடைஞ்சல்களும், இன்னல்களும் சுமந்த படகாகக் கடந்த காலம் காட்சி தந்தது. சுண்ணும்பு நிறைந்த சுரங்கமாக இருந்த காலமாறி சுவர்ணப் பொக்கிஷமாக விளங்க இந்தத் தைப் பொங்கல் பிறந்ததா? அப்படித்தான் விளங்கவேண்டு மென எவரும் விரும்புவார்? அப்படியே விளங்கட்டும்!

நாட்டில் பொருளாதார நலிவும், பட்டினியின் வேகமும் பெருகி வருதல் கண்கூடு. பொங்கல் பிறந்து அறுவடை யான மாசூலைக்கொண்டு சிலகாலம் விவசாயிகள் குதூகலிக் கலாம். நிரம்பிய வயிறு காரணமாக அவர்களும் வாளா யிருக்கலாம். உண்டி சுருங்கும்போது மக்களின் மனநிலை மாறும்! காலம் கசப்பளிக்கும். சுருங்கக்கூறின் விபரீதம் விளையாடும். இது இயற்கை.

குறிப்பிட்ட நாட்கள்வரை குதூகலிக்கும் மக்கள், காலக் கல்லைச் செதுக்கி நூதன வேலைப்பாடமைந்த சிலையாக மாற்ற எண்ணிடார், மந்த வயிறு காரணமாக. மஞ்சமும், மனைவியும், மக்களுமே உலகமென்றெண்ணுவர். அது தேவை, இது வேண்டும் வாழ்விற்கு என்றபோது குறும்பு கள் கொப்பளிக்கும். பொங்கல் விழாக் கொண்டாட்டம் அப்பொழுதுதான் மங்கி மறையும். தன்னிலை உணர்ந்த மக்கள் இன்னலைபறுத்து, கல்லைப் புதுப்பித்து, கண்டோர் மயங்கும் நற்சிலையாக நாட்ட அப்பொழுதுதான் எண்ணு வர். அல்லல், கொந்தளிப்பு தமிழகத்திலேற்படாவண்ணம் ஆட்சியாளரும் மக்கள் பெருந்தகையரும் தடுப்பாரென எதிர் பார்க்கிறோம். பொங்கல் விழா நடத்தும்போது நமக்கு அந்த எண்ணந்தான் தோன்றுகிறது.

ஒத்துக்கொண்டோ, எதிர்க்கவேண்டுமென்றோ எழுத வேண்டுமென்ற தலையங்கமல்ல. எதிர்நோக்குக்கொண்டு எச்சரிக்கையுடனும், பச்சாதாபத்துடனும் தீட்டிய அற வுரையெனக் கூறவிழைகிறோம்.

"பொங்கல் விழா" கொண்டாடுவதேன்? அதன் பெருமை என்ன? என்ற பரீக்ஷை வினாக்களுக்கு பல ஆண்டு களாக நமது விற்பனப் பத்திரிகை சகோதர ஆசிரியர்கள் விதவிதமாக பதில் தந்துள்ளனர். அதனாலதனை இங்கு மீண்டுமெடுத்துக் கூறாது நின்றோம். நிற்க

நமது கோவை முரசு இரண்டாம் பொங்கல் ஒலி யைப் பிறப்பித்திருக்கிறது. போன பொங்கல் கோவை முரசு ஒலிக்கும் இந்தப் பொங்கல் ஒலிக்கும் வித்தியாசமதிக மில்லை. ஆனுல் அந்த ஒலி செய்த மாறுதல்களில் பல மாறு பாடுண்டு. அதன் முயற்சியிலும், பலனிலும் கோவை முரசு வெற்றி கண்டதென நாக்கூசாமல் நம்மெதிரியுங் கூறுவர்.

சுவரொட்டிகளும், பிரசுரக் கைதுண்டுகளும், பிரசங்க மேடைகளும், சிறப்பாகக் கோவைமாவட்டத்திலும் பொது வாகத் தமிழகத்திலும் செய்த கிராம சேவையைவிட கோவை முரசு செய்த சேவை பெரிதெனத் துணிந்து கூற ஆசைப்படுகிறேம்.

போட்டிக்காகவோ, தேர்தலுக்காகவோ நமது பேனு முனை இதுவரை நடனமாடவில்லை என்பதை பொங்கல் விழாக் கொண்டாடுமிந்த நேரத்தில் பூரிப்புடன்கூற ஆசைப் படுகிறேம். அது கிடக்க.

அமைதியும், சுபிக்ஷமும் தமிழகத்தில் நிரந்தரமாக நிலைக்க பொங்கல் பொங்கட்டும்!

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக!

பொங்கலோ பொங்கல்! பொங்குக பொங்கல்!

முகப்புப் படம்:

சென்னை மேயர் உயர்திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள் பொதுநலப் பற்றுள்ளம்படைத்த பெரியார். இவரைந் தமிழ்நாட்டவ ருக்கு நாம் அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. தமிழ் அறிஞர் நாவன்மை படைத்தவர். இவரது தாளாண்மையும், தகுதி யறிந்து செய்யும் பொதுப் பணியாற்றலும் போற்றற்குரியவை. சிறந்த சீலம் வாய்ந்த செம்மை வனத்துடையார். உழைப்பின் சிறப் பினுல் உயர்வடைந்த இந்த பொதுப்பணி சீலரின் நற்சேவை காலத் தில் இந்நகர் புதுமையுறுமென்று எதிர்பார்க்கிறேம். எனவே இவர் நகராண்மை தலைவரானது கண்டு பெரிதும் மகிழ்கின்றேம்.

கோவைக் கோமான் மறைந்தார்

தேன்பாயுங் கொங்கு நாட்டில் அரசியல் வாழ்விலும் பொது வாழ்விலும் மேம்பட்ட ஒரு மேலோன் திடுமென மறைந்தது குறித்து திகைத்தோம். காலக் குறிப்பறிந்த பெரியார்; நாட்டிற்குழைத்த சீமான்; பெற்றபெருந்தனம் பிறர்க்கீதலை என்ற பெருநோக்குக் கொண்ட வள்ளல்; மாணவருலகிற்கும், மன்னிய தேச விடுதலைக்கும், உழுவோர் மாட்சிக்கும் பாடுபட்ட பண்பாளன் 7-11-48 இரவு 1-30 மணியிருக்கும் பாய் வண்ண உடலைக்கருக்கி புகழ்வண்ண உடலை நிறுவி நம்மைவிட்டு அகன்றார்.

மறைந்த பெரியார் வெள்ளக்கிணறு எனும் மாண்புற்ற கிராமத்தில் வேளாண்குடியில் கவுண்டர் மரபில் வெள்ளியங்கிரி என்ற நாமத்தோடு பிறந்தார். பிறந்த மரபு அவரின் பெருந்தன்மையைக் கண்டு அவரைப் பெரிய கவுண்டரென அழைத்தது. அவர் வாழ்ந்த காலத்தில் பலதிறப்பட்ட பொது நிலையங்களுக்குத் தலைவராகவும், துணைத்தலைவராகவுமிருந்தார். இந்திய அரசியல் கோட்டத்தின் உறுப்பினராகவும் விளங்கினார். பல மாட்சிபெற்ற ஆண்டகையை அநியாயக் காலத்தின் வயிற்றுப் பசிக்குணவாகக் கொடுத்தால் நாம் அவ்வளவு துக்கமடையப்போவதில்லை. பிறந்தவர் இன்றில்லாவிடில் என்றே ஒருநாள் மாண்டுதான் போகவேண்டும் என்ற நியதி குறித்து மனச்சாந்தியடைவோம்! ஆனால் நம் மேலோனுக்கு வேளாண்குடி வியக்கப் பிறந்த பெரியோனுக்கு—தாளாண்மையறிந்த தர்மசிலனுக்கு-அரசியலறிந்த அன்பனுக்கு-நேர்ந்த மரணத்தை கொஞ்சம் நினைத்தாலும் நெஞ்சு நெருப்பாய் மாறி தகிக்கின்றதே! அந்தோ! லாரி மோதியா சீலன் இறக்கவேண்டும்?

பெருந் தலைவர்களுக்கும் பெருநோக்குக்கொண்ட பிரபலஸ்தர்களுக்கும் மரணக்கோட்டை சரித்திரம் வேறுவிதமாகக் கிழித்திருப்பானேன்? அவர்களின் பிறப்பும் இறப்பும் ஓர் நூதன சக்திபெற்றவை என்பதை எண்ணும்போது வியப்பையும் அச்சத்தையும் தருகிறது. நல்லவர்களாயிருப்பதற்கு நாசகாலமளிக்கும் நல்ல மரியாதை இதுதானா என்று சுடும் நம் நெஞ்சு நம்மையே கேட்கிறது!

அந்தோ கண்கெட்ட காலமே! கோவைக் கோட்டம் கோமகனில்லாமல் வாடுகிறதே! கவுண்டர் இனமெனும் மரக்கலம் மீகமானில்லாது சஞ்சலிக்கிறதே! தமிழகம் தாளாண்மை தந்த ஒளியில்லாமல் ஊசலாடுகிறதே! அரசியல் வானம் ஜோதிமணிச் சுடர் தாரகையில்லாமல் அழகிழக்கிறதே! அவரைப்பிரிந்துவாடும் அன்பர்களுக்கும், தோழர்களுக்கும், குடும்பத்தார்களுக்கும் என்ன கூறி எப்படி ஆறுதலளிப்பது? வகையறியோம். தமையன் பிரிவால் தளர்ந்த திருவாளர்கள். V. C. பழனிச்சாமி கவுண்டர் M. L. A., V. C. சுப்பையா கவுண்டர்; V. C. குமாரசாமிக் கவுண்டர் அவர்களுக்கும்; கணவனைப் பிரிந்து கதறும் அவர்தம் மனைக்கிழத்தியருக்கும், துயருறும் மகனுக்கும், துடிக்கும் அவரிரு செல்வியருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவிப்பதோடு அவர்களும் நம்முடன் நின்று மன ஆறுதலடைக என வேண்டுகிறோம்.

வாழ்க கவுண்டரின் திருநாமம்!

வருந்துகிறோம்.

பழையகோட்டை பட்டக்காரரான திருவாளர். ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியாருக்கு திடீரென மற்றொரு அதிர்ச்சி தாக்கியிருக்கிறது. தம்பியான அர்ஜுனனை இழந்த சோகத்தை காலம் ஆறுதலளித்து வரும்போது 18-11-48 அன்று தங் கையாரான அம்மணி அம்மையாரின் மறைவு பழைய சோகத்தைப் பெருக்கியதாகும்.

நமது பட்டக்காரருக்கும் அம்மையாரின் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பர்களே!

கோயிலும், கடவுள்களும், மதங்களும் ஒரு சிலர் தம் வாழ்வுக்காக வகுத்துக்கொண்ட வழிகள். அவை இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருக்கவேண்டுமென்றாலும் அறிவுக்கேற்ற ஒரு நாணயமான பாரபக்ஷமற்ற கடவுளை வணங்குங்கள். உங்களை இழிவுபடுத்தாத, ஒரு மதத்தைத் தழுவி நடவுங்கள் என்று தான் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

— பெரியார் ஈ. வே. ரா.

★

காலத்தை அலங்கரிக்க வழி.

நமது துரதிஷ்டமெல்லாம் ஒன்றாகக் குவிந்து குன்று போல் ஆகும்போது நம்மில் ஒவ்வொரு நபரும் துன்பத்தை துணிந்து அனுபவிக்க முன் வந்தால் அநேக மக்கள் அமைதியாக தங்கள் காரியத்தைச் செவ்வையாக செய்து காலத்தை அலங்கரிப்பார்கள்.

— சாக்ரட்டீஸ்.

★

கவர்ச்சி.

ஒரு பெண் ஒரு ஆணைக் கவர்ச்சி செய்யவேண்டுமென்றால், நிச்சயம் அவள் மார்பு அழகியாயிருக்கவேண்டும். ஒரு பெண் மற்றொரு பெண்ணை கவர்ச்சி செய்ய வேண்டுமென்றால் நிச்சயம் அவளிடம் கம்பீரத் தோற்றமிருக்க வேண்டும். ஒருத்தி எல்லோரையும் கவர்ச்சி செய்யவேண்டுமென்றால் நிச்சயம் அவளுக்கு வசீகர சக்தி அமைந்திருக்க வேண்டும்.

— பல்தார்ஷார்கிரேதியன்.

கோவைத் தந்தை

V. C. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களின் அகால மரண அந்தியக் கூட்டத்தில் 10-11-48ல் கோவை டவுன்ஹால் மைதானத்தில், கோவைத் தந்தை C. S. இரத்தினசபாபதி முதலியாரவர்களின்

தலைமைப் பேருரை.

அன்பர்களே, கோவை தாலூக்கா நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக திரு. V. C. வெள்ளியங்கிரிக் கவுண்டரின் அகால மரணத்தைக் குறிக்கும் அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமையேற்ற நான் தாங்கொணு துக்கத்தால் என்ன சொல்வதென்று எனக்கே தெரியவில்லை. சரியாக பத்து மாதங்களுக்குமுன் காந்திஜி மரணத்தைக் குறித்து அனுதாபக் கூட்டம் என் தலைமையில் தான் நடந்தேறியது. காந்திஜி மரணம் எப்படி இந்த நாட்டிற்கு மட்டுமல்லாது அகிலஉலகிற்குமே யீடுசெய்ய முடியாதபடி மாபெரும் நஷ்டமோ, அதே போன்று கவுண்டரவர்களின் மரணம் கோவை ஜில்லாவிற்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய நஷ்டமென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

கவுண்டரவர்களின் வாழ்நாளில் பெரும்பகுதி பொது நலத்திலே கழிந்தது. நமக்கிந்த சமயத்தில் ஒரு நினைவு மலருகிறது. 1942-ம் ஆண்டில் காங்கிரஸ்காரர்களை தீவிர மகா அரசாங்கம் சிறைசெய்யும் போது, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்னை வந்து கவுண்டரை கைதுசெய்யலாமா என்று கேட்டபோது, கவுண்டரை கைதுசெய்யின் கோவை மாவட்டத்து மக்களையே நீங்கள் கைது செய்ய வேண்டும். கோவை ஜில்லா மகாஜனங்கள் யாவரும் புரட்சித் தீயில் குதிக்க கிஞ்சிற்றேனும் அஞ்சமாட்டார்கள் என்றேன். என் வேண்டுகோளபடி அரசாங்கம் அவரைக் கைதுசெய்யவில்லை. அன்றிருந்து கவுண்டருக்கும் எனக்கும் அதிகத் தொடர்பேற்பட்டது. இந்த ஜில்லாவிலே உண்மையாக மிக்கமதிப்பும் அதிக மரியாதையும் எனக்கு ஒருவரிடம்

தில் இருக்குமானுல் அது காலஞ்சென்ற திரு கவுண்டராகத் தானிருக்கமுடியும். அரசியல் கொள்கைகளிலே எங்களிடத் தில் மலையென வேறுபாடுண்டு. பல தேர்தல்களில் நாங்க ளிருவரும் பலத்த போட்டி இட்டதுண்டு. என்னவிருந்த போதிலும் தனிப்பட்ட முறையில் எங்களுக்குள் எந்த வேற் றுமைச் சக்திகளும் விளையாடவில்லை.

ஏழைகளிடத்தில் பச்சாதாபமுடையவர்; சங்கீதப் பிரியர்; மாணவர்களிடத்தில் நல்ல மதிப்புப்பெற்றவர்; உழ வர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகளைத் தந்து ஆதரித்து வந்தவர்; சிறந்த தேசீய பக்தர்; காந்தீயக் கொள்கைகளை அப்படியே கடைப்பிடித்து நடப்பவர். இத்தகைய ஒரு பிரபலஸ்தரை நமது ஜில்லா இழந்தது இந்த ஜில்லாவிற்கே ஒரு மகத்தான நஷ்டமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள் வர். அவரைப் பிரிந்து தவிக்கும் எல்லோருக்கும் இந்தக் கூட்டத்தின்மூலம் எனது ஆழ்ந்த துக்கத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

★

மேன்மையான 100, 80 நெ. நூல் சேலை

களுக்கு சிறந்த இடம், மொத்த

வியாபாரிகளுக்கு

சி. வெ. வே. வெங்கிடராமசெட்டியார்,

ஜவுளி வியாபாரம்,

264. ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

நாணயத்திற்கும், குறைந்த விலைக்கும்

பெயர் பெற்ற இடம் இதுவே.

காலம் போகிறது!
கடமையைச் செய்வோம்!

(சர். சி. வி. ராமன்)

(கோவை திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் 'கோபால்பாக்" மாளிகையில் கடந்த 15-11-48 மாலை விஞ்ஞானி சர். சி. வி. ராமன், "காலமும் விஞ்ஞானமும்" என்ற பொருள் பற்றி பின்வருமாறு பேசினார்.)

திரு. ஜி. டி. நாயுடு, நாட்டின் கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர். அப்படியே இளைஞர்களின் நல் வாழ்விலும் அக்கறை கொண்டவா. அத்தகைய ஒருவரை தங்கள் ஜில்லா வாசியாகப் பெற்றதற்கு கோவை மக்கள் பெருமை கொள்ளவேண்டும். அவரைப்போலவே இந்த இரண்டு விஷயங்களில் எனக்கும் ஆர்வம் உண்டு.

காலத்தை முக்கியமாகக் கருதுவதில்லை என்ற குறை இந்திய மக்கள்பால் உண்டு. காலத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள், மிக அழகான கடிகாரங்களை வைத்திருப்பதை நாம் காண்கிறோம். சொற்பொழிவாற்றுபவர்களின் நேரத்தைக் குறைக்கக் கண்டுபிடிக்கப்பட்ட கருவியே கடிகாரம். கப்பல்களின் போக்குவருத்து நேரத்தை நிர்ணயிக்க முதன் முதலில் கடிகாரம் பயன்டடுத்தப்பட்டது. இதனால், பிரிட்டிஷாரின் கப்பலோட்டம் அபிவிருத்தி பெற்றதுடன் கால நிர்ணய இயந்திரமும் வளர்ச்சி பெற்றது. நேரத்தை மிச்சப்படுத்த, சொல்லமுடியாத அளவுக்கு இப்பொழுது ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவில் உணவு, பால், தேன் முதலிய எதற்கும் பங்கீடு கிடையாது. காலம் மட்டுந்தான் பங்கீடு செய்யப்பட்டிருககிறது. இந்தச் செயலை, இந்த நேரத்திற்குள் முடித்துவிட வேண்டுமென்பது அங்கு வாழ்க்கை நியதியாக இருக்கிறது. காலம் என்பது அமெரிக்காவில் விலையுயர்ந்த ஒரு 'சரக்கு'.

காலமும் இடமும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. இழந்த இடத்தைத் திரும்பப் பெறலாம். ஆனால், வீணாக்கப்பட்ட காலத்தை மீண்டும் பெறமுடியாது. காலம் உயர்ந்ததென்றால், இரவும் பகலும் ஓய்வின்றி உழைக்கவேண்டுமென்று இதற்குப் பொருளல்ல. வெற்றியின் நுட்பமும் ஓய்வின்றி உழைப்பதில் இல்லை. காலத்தை ஒழுங்காக வரையறுப்பதில்தான் இருக்கிறது.

எவ்வளவுதான் உயர்ந்த செயலாயினும் அதையும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் துவங்கவேண்டும்; குறிப்பிட்ட நேரத்தோடு முடிக்கவேண்டும். இல்லையேல், மனிதனுக்கு வாழ்க்கை சிக்கலாகிவிடும்.

வான வெளித் தோற்றங்களிலிருந்து நமக்கு காலத்தைப் பற்றிய ஒரு உண்மை கிடைத்திருக்கின்றது. அது, காலமும் இடமும் ஒன்றையொன்று தொட்டு நிற்கின்றன என்பதாம். காலத்தை ஒரு நகருள பொருளைக்கொண்டு புரிந்துகொள்ளலாம். இந்த உலகில் எந்த ஒன்றும்

வானத்தின் சூழ்நிலையோடு தொடர்பு கொண்டிருக்கிறது.

உலகம் எப்போது தோன்றியது; அது எப்போது அழியும்; என்பவற்றைத் திட்டமிட்டுக் கூறமுடியுமா? ஒருபோதும் முடியாது. இது, உலகத் தோற்றத்தின் ஒரு அற்புதம்.

உலகத்தின் வரையறுத்துக் கூற முடியாத ஆயுளை நோக்கும்போது நமக்குக் கிடைத்துள்ள காலம் மிகச் சொற்பம். அதை நாம் நல்ல முறையில் பயன் படுத்தவேண்டும். எல்லையற்ற தொல்லைகள் நிறைந்த இவ்வுலகை சிறிதளவாவது களிப் படையச்செய்ய முயலாத ஒவ்வொரு நாளும் வீண் நாளாகும்.

நாம் பெரிய விஷயங்களைப் பற்றி கவலைப்படாமல் சிறிய விஷயங்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். பெரிய விஷயங்கள் தம்மைத் தாமே கவனித்துக்கொள்ளும். ஒரு விநாடியில் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால், 3600 விநாடிகள் கொண்ட ஒரு மணியில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாமல்லவா? காலம் யாரையும்கேட்காமல் போய்க் கொண்டிருக்கிறது. எனவே, இப்பொழுதே ஏதாவது நல்லது செய்வோமாக!

★

நாணயம்!

நம்பிக்கை !!

விலை நயம் !!!

★

பட்டு & நூல்

ஜவுளி ரகங்களுக்கு

சிறந்த இடம்

P. A. ராஜா செட்டியார் & Co.,

ஜவுளி வியாபாரம்,

ராஜ வீதி, : : கோயமுத்தூர்.

பொங்கலோ, பொங்கல்!

—ஆசிரியை

★

பொங்குக பொங்கல்! பொங்கலோ பொங்கல்!!
மண்வளம் பொங்கி எண்வளம் பெருகி
வறுமை வதைந்து சிறுமை சிதைந்து
உழவது ஓங்கி தொழிலது உயர்ந்து
இளையரும் முதியரும் கிளைஞரும் ஆவார்
இன்பக் கடலில் நன்றாய் மிதந்து
இப்பெரும் வாழ்வில் எப்பெரு நலமும்
அன்பர் பகைவர் பொதுமில ரனைவரும்
வேண்டுமின் பமெலாம் மாண்புறப் பெறவே
உழவர் உள்ளம் உள்ளொளி கிளர
அன்புப் பெண்டிர் அறமனை வளர
புத்துடை புதுப்பால் பொன்னிற மஞ்சள்
கன்னல் செந்நெல் முக்கனி மதுரம்
யாவும் படைத்து யாவரும் மகிழும்
தையதில் பிறந்தது மையறு பொங்கல்
பொங்கலோ பொங்கல் எனத் தமிழ் பூமியர்
வாழ்த்தினை ஏற்றதே வசையிலாப் பொங்கல்

★

"பத்திரிகைத் தொழில்"

பொது சேவையா, சொந்தத் தொழிலா ?

அறிஞர் C. N. அண்ணாதுரை M. A.,

★

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அண்ணா: இலாபமோ ஆள் தப்புவதே சிரமமல்லவா? சமூகத்திலே காணப்படும் மூட நம்பிக்கைகளை முறியடிக்க பழங்கால ஏற்பாடுகளிலே உள்ள கேடுகளைக் களைய சுரண்டல் முறைகளை எதிர்க்க, மக்களின் பொது நலனைக் கெடுக்கும் புல்லர்களுக்கு எந்த இடத்திலும் எந்த வகையிலும் இடம் இல்லாதபடி செய்யத் துணிவு கொள்வதே கஷ்டம். துணிந்தாலும் அந்த முறையிலே பத்திரிகையை நடத்தினால் அப்படிப்பட்ட பத்திரிகைக்கு ஆதரவு கிடைப்பது மிக மிகக் கஷ்டம். நடத்துபவருக்கு அது ஒரு தொழிலாகாது — துயரமே தரும். இலாபம் கிட்டாது. பழியே கிடைக்கும். எது வரினும் சரி என்று அஞ்சாது அரும்பணியாற்றும் சிலருக்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்படும்.

ம. பொ. சி. அவ்வளவையும் அவர்கள் ஆர்வத்துடன் சகித்துக் கொள்ளுகிறார்கள்.

அண்ணா ஆமாம். பத்திரிகையை இலாபம் தரும் சொந்தத் தொழிலாகக் கருதுவோர் ஆண்டுக்காண்டு இலாபத் தொகை எவ்வளவு அதிகரிக்கிறது என்ற கணக்கிலே களிப்படைகிறார்கள். கொள்கையைப் பரப்பும் கருவியாகப் பத்திரிகையைக் கொள்வோரோ, நாட்டு மக்களின் நடவடிக்கையைத் திருத்தத் தமது பத்திரிகை எந்த அளவுக்குப் பயன்பட்டது என்று கணக்கெடுத்துக் களிப்படைகிறார்கள்.

ம. பொ. சி. பொதுவாக பத்திரிகைத் தொழிலைத் தொண்டு என்று கருதுபவருக்கு இன்பம் அதிலே தான் கிடைக்கிறது.

அண்ணா : கொள்கைக்காகப் போராடும் பண்பு கொண்டோ, பொது நலனை வளர்க்கும் நோக்கம் கொண்டோ, நடத்துவதாகத்தானே. பெருத்த இலாபம் கிடைக்கும் அளவிலும் முறையிலும் பத்திரிகைத் தொழிலை நடத்துபவர்களெல்லாம் கூடக் கூறிக்கொள்வார்கள்.

ம. பொ. சி. ஆமாம்; யாரும், தாங்கள் செய்யும் தொழில், கேவலம் லாப நோக்கத்துக்காக அல்ல. பொதுமக்களுக்காகவே செய்கிறோம் என்றுதான் பேசுவர், ஆனால், ஆராய்ந்தால் விஷயம் விளங்கும், உண்மை துலங்கும்.

அண்ணா: வெடி, வாணம் இவைகளை வியாபாரம் செய்கிறவர், பக்தி மார்க்கத்தில் மக்களை ஈடுபடச் செய்யவும், கடவுளின் கருணையைப் பெறவுமேதான். தான் எத்தனையோ ஆயிரம் தொழிலிருக்க, வெடி வாணம் தயாரித்துத் திருவிழாக்களுக்கு விற்கும் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறுகிறார்.

ம. பொ. சி. அது போலத்தான்; ஒவ்வொரு தொழிலுக்கும் கூறுவார்கள். ஆனால், உண்மையிலே பொது நலனுக்குப் பாடுபடும் விதமாகப் பலப்பல தொழில்கள் அமைவதில்லை. ஏராளமான விளம்பரங்களைச் சுமந்துகொண்டு, சொகுசாக வாழும் பத்திரிகைகள் அந்த விளம்பரங்களின்மூலம் பெறுகின்றனவே தவிர, பொதுமக்கள் அடையும் பிரதான பலன் என்ன?

அண்ணா: அப்படியானால், விளம்பரம் அதிகம் வெளியாகும் பத்திரிகைகள், பொதுச் சேவை புரிபவைகள் அல்ல, என்று தீர்மானித்துவிடலாமா?

ம. பொ. சி. அறுதியிட்டுக் கூறிவிட முடியுமா? பொதுவாக, இதனைக் கூறலாம். வெறும் செய்திகளை, அதிலும் மக்களுக்குள்ள குறைபாடுகளை ஒழிக்கப் பொது நலனை வளர்க்க பயன்படும் செய்திகளைத் தராமல், பொழுதுபோக்குக்கும், மனக் கிளர்ச்சிக்கும் வம்பளப்புக்கும் பழமை மோகத்துக்கும் பயன்படும் செய்திகளையும் வருவாய்தரும் விளம்பரங்களையும் ஏராளமாகக்கொண்டு வெளிவரும் பத்திரிகைகள் — நடத்துபவர்களுக்கு இலாபம் தரும் சொந்தத் தொழில்தான். சந்தேகமில்லை. செய்திகளைத் தருவதும், பொதுமக்களுக்கு ஒருவிதப் பணிதானே?

அண்ணா: அது, தரப்படும் செய்திகளைப் பொறுத்திருக்கிறது. மன்னர்களின் கோலாகல வாழ்வு ஆடையலங்காரம் அரண்மனை விசேஷம், அங்கு நடைபெறும் விருந்து, களியாட்டம் ஆகிய செய்திகளை விளக்கமாகவும், விதவிதமாகவும், வனப்புடனும், படங்களுடனும் வெளியிடுகிற முறையினாலே மக்களின் மனதுக்கு தெளிவோ— அறிவுக்கு வளர்ச்சியோ, ஏற்படப் போகிறதா? அவைகளைப் படிப்பதாலே, நாட்டு மக்களின் வாழ்விலே என்ன நற்பலன் காணமுடியும்?

ம. பொ. சி. ஒன்றுமில்லை. பொழுது போக்குத்தான், உல்லாசம்தான்.

அண்ணா: இவ்வகையிலே ஒரு பத்திரிகை வெளிவந்தால் ஏராளமான பிரதிகள் செலவாகக்கூடும்— ஆனால் பொது சேவை என்று இதனைக் கருதமுடியாதல்லவா? மாந்திரீகம், ஜோதிடம், குறி பார்த்தல், கும்பாபிஷேக வைபவம், சாதுவின் மகத்துவம் இவைகளைப்பற்றி, இந்த ஜனநாயக நாட்களில், அறிவு பரவும் நாட்களிலே வெளியிட்டுக் கொண்டிருக்கும் பத்திரிகைகளைப் பொது சேவை செய்வதாகக் கூற முடியுமா? மக்களின் மந்த மதியையும், பொழுதுபோக்கும் சுபாவத்தையும், பயன்படுத்திக் கொண்டு, இலாபம் சம்பாதிக்கும் சுயநலக் காரியந்தானே அது?

ம. பொ. சி. அப்படியானால் பகுத்தறிவுக்காகப் பரிந்து பேசும் பத்திரிகைகள் பொது சேவை செய்வன, மற்றவை சொந்தத் தொழில் என்கிறீர்?

அண்ணா: ஏன் சொல்லக்கூடாது? பகுத்தறிவுக்காகப் பரிந்து

பேசுவது, என்றுகூடக் கூறவேண்டாம். நாட்டில் அவ்வப்போது காணப்படும் நிலைமைகளைக் கண்டு, நலனைப் பெருக்கும் வகையான யோசனைகளையும், திட்டங்களையும் வெளியிடும் பத்திரிகைகள் பொது சேவை புரிகின்றன என்று திட்டமாகக் கூறலாம். அவை இலாபத்தைப்பற்றிய அக்கரை அற்று இருக்கவேண்டும்.

ம. பொ. சி. வயல்கள் வறண்டு கிடக்கின்றன. விவசாயம் நசிந்து கிடக்கிறது. இந்த நிலைமையை படமாக்கி, பாட்டியற்றி வெளியிடலாம் ஒரு பத்திரிகை. இந்த நிலைமையை விளங்கச் செய்வதோடு திருப்திப் படாமல், இந்த நிலைமைக்கும், ஆட்சி செய்யும் கட்சிக்கும் தொடர்பு ஏற்படுத்திக் காட்டலாம், மற்றோர் பத்திரிகை. இன்றைன்று, இந்த வருஷம் இப்படித்தான் இருக்குமென்று, இருஷிகேச மலையில் இருபதாண்டு தவம் செய்த, இன்பானந்த சுவாமிகள் பத்தாண்டுகளுக்கு முன்பே கூறினார்—என்று எழுதி வயல் வறண்டதைப் பயன்படுத்தி சுவாமிகளின் மடத்துக்கு இலாபம் தேடலாம். வேறோர் பத்திரிகை, அபிஷேகம் வருண ஜெபம் செய்தால், மழை பெய்யும் என்று எழுதி வைதிக சேவை செய்யலாம். இப்படி ஒரே ஒரு நிலைமையைப் பல்வேறு கருத்துகளில் பயன்படுத்தலாமல்லவா?

அண்ணா: பயன்படுத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

ம. பொ. சி. இவ்விதமான முறைகளைக் கையாள்வதைவிட வயல்களுக்கு நீர்ப்பாசனத்துக்கு தேவையான முறைகளையும், மழை தவறினால் கையாளவேண்டிய முறைகளையும் மற்ற நாடுகளில், இவ்விதமான சமயத்தில் என்ன செய்து பஞ்சம் வராமல் தடுக்கிறார்கள் என்பதையும் எடுத்து எழுதினால், எழுதும் பத்திரிகை பொது சேவை செய்கிறது என்று பாராட்டலாம்.

அண்ணா: ஆமாம். ஆனால் ஜனங்கள் விரும்பிப் படிப்பார்களா? அவ்விதமான திட்டங்களைப்பற்றி எழுதினால்?

ம. பொ. சி. படிக்கமாட்டார்கள். புரிந்துகொள்வது சிரமமல்லவா? அவர்கள் பஞ்சத்தால் பத்துப்பேர் மடிந்ததற்கு ஒரு சிந்து வெளியிட்டால் படிப்பார்கள் — டென்மார்க் நாட்டு முறை இது, நார்வே நாட்டுத் திட்டமிது என்றால் படிக்கமாட்டார்கள்.

அண்ணா: ஆகவே அவ்விதம் எழுதும் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகாது.

ம. பொ. சி. ஆகாது. இலாபம் கிடைக்காது. ஆனால் பலன் இல்லாமல் போகாதே.

அண்ணா: பலனா? யாருக்கு? என்ன பலன்?

ம. பொ. சி. பத்திரிகை நடத்துபவருக்கு இலாபம் இராது. ஆனால் அதிலே வெளிவரும் திட்டத்தை அக்கரையுடன் அரசாள்வோர் கவனித்து புதுத் திட்டம் வகுத்தால் நாடு செழிக்கும்—மக்கள் சுகப்படுவார்களல்லவா?

அண்ணா: ஆமாம். அந்த சுகத்தைக் காண்பதுதான் பொதுசேவை புரிபவன். படுகிற பாட்டுக்கெல்லாம் பரிசு.

ம. பொ. சி. அந்த நோக்கத்துடன் நடத்தப்படும் பத்திரிகைகளெல்லாம் பொதுச்சேவை புரிபவை என்று தாராளமாகக் கூறலாம்.

(வானொலி நிலையத்தார் இசைவு பெற்றது)



பாச வலை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆசிரியை
S.P. மீனாட்சி அம்மாள்

2. காலமுகியின் விளக்கம்

துன்பத்திலும் துயரத்திலும் நாளைக் கழித்து வந்த நாளில் பள்ளி நண்பரான சுகுணனின் கண்வலையில்பட்டேன். அவரைக் கண்ட நாள்தொட்டு அவர் வழியே என் விழி நாடுகிறது. தேனும் கைக்கும் விதத்தில் திகட்டாது வாயினிக்கப் பேசாவிட்டாலும்; கண்களால் பேசிக் காலத்தைக் களித்துள்ளோம்.

சங்கராந்தி நாளன்று மாடொன்று என்னை விரட்டி வரும்போது திடீரென வீதியில் மின்னலெனத் தோன்றி அருகிருந்த அன்னியர் பங்களாவிற்கு என்னைத் தூக்கிச் சென்று இரும்புக் கதவைச் சாத்தி என்னைக் காப்பாற்றினார். அன்று அவரென்னைத் தொட்டதிலிருந்து என் உள்ளத் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. பின்பு பள்ளிக்கு வரும்போதெல்லாம் ஜாடையாக விழி வழியில் வார்த்தைகளை உதிர்த்து அன்பைப் பெருக்கினார்.

சுகுணன் உள்ளூர் வாசியல்ல; ஹாஸ்டல் மாணவன். செல்வனென்பதை மட்டுமுணர்வேன். செல்வமுடையவன் என்ற காரணத்திற்காக சினிமாக் காதலியாக நடிக்கும் கள்ளியல்ல நான். என் உள்ளத்தின்

அடித் தளத்திலே அவர் தனது திருவுருவத்தை நிலை நாட்டிவிட்டார். அந்த அன்பை கூட்டிக் குறைத்துப் பேசுவோரை பித்தர் களெனக் கூற ஆசைப்படுகிறேன். சுகுணனின் மேலான குணத் திற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளுள் ளன. அன்று தசரா விடுமுறைக்கு தன்னூருக்குப் போகும்போது அவரென்னைச் சந்தித்துப் பேசிய பேச்சையெல்லாம் இன்று அப்படியே கூற ஆசைப்படுகிறேன். அன்று (நினைக்கிறுள்).

அன்று நடந்த சம்பாஷணை

சுகுணன்: கானு! 15 நாட்கள் உன்னைச் சந்திக்க முடியாதபடி நிலைமை ஏற்பட்டுள்ளது. தந்தை யின் கடிதம் என்னை உடனே வரும்படி கட்டளையிட்டிருக்கிறது.

கானமூகி: தந்தையின் கட்டளை யையுணர்ந்த தனயர் காதலியின் வேண்டுகோளை நிராகரிக்காத காதலாயிருக்க வேண்டுமென்பதே என் விருப்பம்.

சுகு; கானு! நீ எதை எதை எண்ணுவாயோ? அதைத்தான் நானும் எண்ணுகின்றேன். காலப் பாம்பிற்கு நாம் தேரைகள் என்பதைமட்டும் மறுக்க முடியாதபடி கூறுகிறேன்.

கான: சுகுணரே! உள்ளம் விட்டுஇன்று உண்மையை உரைக் கிறேன். உம்மைக் கலங்கிய கண் களோடு ஊருக்கனுப்ப நான் விரும் பவில்லை. உண்மையை ஒளித்து வைக்கவும் விருப்பமில்லை. தாயற்ற நான்—பெற்ருேர்களால் கொடுமையாக நடத்தப்படும் நான் உண்மையிலே சுகமனுபவிக்கும் நேரம் எனக்கு தங்களைச் சந்திப்பதே தவிர வேறில்லை. நான் தாசி குலத்தில் பிறந்தவள். என் மாற் ருந்தாய் என்னை விபசார இயந்திர மாக்கி பொருளீட்டப் பார்க்கிருள் இதற்கிடையில்தான் நீங்களும் நானும் சந்தித்தோம். இயற்கை நம்முள்ளத்தைப் பரிமாற நமக்கு சந்தர்ப்பமளித்தது. ஆதிக்கம் செய்யும் பெற்ருேர் ஒருபுறம், அன்புக்கடலான உங்கள் கண் முழக்கம் மற்ருேர்புறம்!! உங்களி டத்தில் குறையிரந்து நான் மன்று டிக் கேட்டுக்கொள்வது எனக்கு உங்கள் கையால் எப்பொழுது விடுதலை கிட்டுமென்று? அதை ஒவ் வொருநாளும் ஏன், ஒவ்வொரு வினடியும் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்.

சுகு: கானு! காதலிக்கும் வித்தை பிறர் சொல்லிக்கொடுப்பதிலிருந்து வருவதில்லை. பிறர் துணைகொண்டு செய்யப்படும் காரியமல்ல இது. ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் கட்டுப்படுத்தக்கூடிய சங்கிலியே காதலென்பதை நன்குணர்வேன். காதலால் கட்டுப்பட்ட நான் தியாகம் செய்ய அஞ்சேன். கொஞ்சம் நாள் பொரு. மிஞ்சும் கஷ்டத் தையெல்லாம் என்பொருட்டு இன் பமாக மாற்றிக்கொள். இருவரும் புது வாழ்க்கைப் படகில் பிரயாணம் செய்யலாம். ரயிலுக்கு நேரமாகிறது வருகிறேன்.

கான: இனித் தங்களை நிறுத்தி வைக்க விரும்பவில்லை. நெடுநேர மாகிறது நானும் வந்து. வணக்கம்

* * *

ஆகா! அன்று அவர் கூறிய வார்த்தைகள் நாளெட்டான பின் பும் என் காதில் இப்போது கூறி யதுபோல்தான் தென்படுகிறது.

இதற்கிடையில் என் மாற்ருந் தாயும் தந்தையும் பேசிய பேச்சை யும் நினைத்தால் பகீரென வயிறு பற்றி எரிகிறது. (நினைக்கிருள்)

சம்பாஷணை.

நளினி: ஏங்க! அ. மு. வ. சோம சுந்தரம் செட்டியார் பெண்ணை

வைச்சுக்கிறேன். அதுக்காக 10000ரூபாய் ரொக்கமா முதல்லே தந்துடுறேன் பின்னே பிள்ளைக்கு மாசம் 500 ரூபாய் சாப்பாட்டுக்குத் தந்துடுறேன்சொல்றாரு! நீங்க எருமை மாட்டிலே மழைபெஞ்ச மாதிரி ஒண்ணும் கவனிக்காம பேசிகிட்டேயிருக்கீங்க.

ஜம்புநாதன்: இந்தா பாரு பாவம் நம்ம கஷ்டத்துக்காக தாயில்லாப் பெண்ணை விபரீதத்துக்கெல்லாம் ஆளாக்கி அதனாலே நாம் வாழணுமா? அய்யோ! ஒண்ணும் தெரியாத பொண்ணை உபத்திரவஞ்செஞ்சு அதனாலே நாம் வாழணுமா?

நளினி; இந்தா பாருங்க! வேதாந்தம் பேசிக்கிட்டு குந்தி வேளா வேளைக்குச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தா எங் கழுத்திலே காதிலேயிருக்கிற நகைக்குத்தான் கேடு வருது? பெண்ணைப் பெத்தா யாருக்காவது கல்லாணம் கட்டித்தானே ஆகணும்! கட்டின இடத்திலே அது தவறி நடந்திட்டா அப்ப உங்க வேதாந்தம் என்ன ஆகிறது. இந்தா பாருங்க! காத்துள்ளபொழுதே தூத்திக்கொள்ளணும்! செட்டியார் முறுக்கிலே இப்பப் பேசுறாரு? அவரையும் கைவிட்டா என் எண்ணத்திலியும் மண்ணைப்போட வேண்டியதுதான்.

ஜம்: இப்படி எல்லாத்துக்கும் சந்தேகம் நினைச்சிக்கிட்டேயிருந்தா என்னதான் செய்றது. உன்னிஷ்டப்படி செய்றதை செஞ்சுதானே தீருவே, இதிலே என் அபிப்பிராயத்தை ஏன் கேக்கணும்.

நளினி: நானிப்பவே ஏகாம்பரத்துகிட்டே சொல்லி அதுக்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுறேன்.

* * *

தந்தையின் அபிப்பிராயம் ஒன்று. தாயின் என்னமோ மிகப் பயங்கரமானது. என்னத்தைச் சொல்ல. தாயின் கனவு கனவாயிருக்கலாம். நனவாக்க முயன்றால் என் உயிர் என் உடலத்தில் நிலைக்காது. பணத்திற்காக என் உடலை உயிரை ஒப்படைக்க வேண்டுமா? நளினி! நீ நாகப்பாம்பாக மாறி என்னைக் கொத்தி என் உயிரைப் பெற்றுக்கொள்! வேறுவிதமாக விபசாரியென்ற முத்திரை முகப்பை எனக்குச் சூட உன்னாலும் முடியாது. உன்னைச் சார்ந்தவர்களாலும் முடியாது. இது உண்மை. இந்த சமயத்தில் கடிதமொன்று வந்ததெனக்கு.

அதை அவரின் அன்புத்தோழர் ராமானுஜத்தின் தங்கை சரஸ கொண்டுவந்து என்னிடம் கொடுத்தாள்.

அந்தக் கடிதத்தில்!

அன்பே!

நலம். நலமறிய வேணவா. வந்து பத்து தினங்களாயின. உன்னைக் காணாது ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக எனக்குத் தென்படுகிறது. விழியில் உணவூட்டு முன் வித்தையை யார் அறிவார்? இதழ்த் தீனி மென்று தின்னக் கொடுத்த உன் கையால் விஷம் கிடைத்தால் அதை அமுதெனஅள்ளிப் பருக அஞ்சமாட்டேன். இங்குள்ள நிலைமை மாறுதலை ஏற்படுத்த நினைக்கிறது. காதல் சரித்திரச் சக்கரம் ஆக்கிரமிப்பு பாதையில் தான் சுழன்றோடியுள்ளது. அங்கிலே நம்மை நாடலாம்! அதற்குரிய அறிகுறிகள் இங்கு கணக்கு ஏற்பட்டுள்ளது ஆறுதலுடனிரு விரைவில் வருகிறேன் பிறநேரில்.

அன்பு.
சுகுணன்.

கடிதங்கண்டு கலங்கினேன் அடக்கம் படித்து அவஸ்தையுற்றேன். விரைவில் வருகிறேன் "ஆறுதலுடனிரு" என்றவார்த்தையைப் பன்னிப்பன்னிப் படித்து தேறுதலுற்றேன். வருகிறேனென்று எழுதாது விரைவில் வருகிறேனென்றும் முடிக்காது, ஆறுதலுடனிரு என்றும் கூறாது பிறரேரில் ஏன்று எழுதியமை குறித்து கஷ்டத்தை ஒருவாறு அடக்கி ஆறுதல் பெற்றேன், நேற்றைய என்பெற்றோர்களின் பேச்சும் இன்றைய கடிதத்தின் அடக்கமும் என்னைப் படாத பாடு படுத்தி துன்புறுத்தின,

—தொடரும்

★

மகிழ்ச்சி தரும் செய்தி.

தமிழ் பெரியார், திரு. வி. க. அவர்களும், திருமதி. S. குஞ்சிதம்,—குருசாமி B. A. L. T. மற்றும் பல அறிஞர்களும், தொடர்ந்து எழுதுவதாக வாக்குறுதிதந்துள்ளார்கள் திருக்குறள் ஆராய்ச்சிக்கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும்.

(ஆசிரியை)

குரு ராஜா ஆயில் மில்ஸ்

)o(

★ உபயோகத்திற்கு உகந்தது
★ குணத்திலும் மணத்திலும் சிறந்தது
★ சுத்தமாகவும் தெளிவாகவுமுள்ளது
★ நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டது
★ மொத்த வியாபாரிகளுக்கு ஏற்றது.

கடலை எண்ணெயும், தெளிவான தேங்காய் எண்ணெயும் மொத்தமாகக் கிடைக்கும்

விபரங்களுக்கு:—

குரு ராஜா ஆயில் மில்ஸ்,
அவினாசி ரோடு, கோயமுத்தூர்.

— உற்பத்திக்கு ஊக்கம் —

— அறிஞர், ஜி. டி. நாயுடு

கொஞ்ச காலத்துக்கு முன்பு நம்முடைய தேசத்தில், சுதந்திரம் எப்பொழுது கிட்டும் என்பதே ஒரு மிகப் பெரிய பிரச்னையாக இருந்தது. அது கிட்டிவிட்டது. ஆனால் அதன்பின் தொழிலாளர்களுக்கு தொழில் பஞ்சமும் விவசாயிகளுக்கு தொழிலாளர் பஞ்சமும் அரசாங்கத்துக்கு நேர்மையாக உழைக்கக் கூடிய அதிகாரிகள் பஞ்சமும், எல்லாருக்கும் சேர்த்து சாப்பிடுவதற்கும், உடுத்திக்கொள்ளுவதற்கும், உணவும், துணியும், வீடும் பத்தாக் குறையாக இருக்கின்றதே என்ற பிரச்னை ஒவ்வெருவரையும் வாட்டிக் கொண்டுதான் இருக்கின்றது. இப்படி வாட்டிக்கொண்டிருக்கும் போது ஒருவரும் யாதொரு பரிகாரமும் தேடவில்லையா என்று பார்ப்போமானல் தொழிலாளர்களும் தொழில் செய்துகொண்டுதான் வருகிருர்கள். முதல் வைத்திருப்பவர்கள் தொழில் கூடங்களை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிருர்கள். நிலம் வைத்திருப்பவர்கள் விவசாயம் செய்துகொண்டுதான் வருகிருர்கள். அரசாங்கமும் ஒவ்வொரு நிமிஷமும் பரிகாரங்கள் தேடிக் கொண்டும் செய்துகொண்டும்தான் இருக்கிருர்கள். இப்படி இருக்க ஏன் இந்த நிலைமை சீர்படுத்தப்படவில்லை என்று எல்லாருடைய கவனத்தையும் இழுத்துக்கொண்டிருக்கிறது. அநேக நிபுணர்கள் தனித்தனியாகவும் கமிட்டிகளிலிருந்தும் இதற்குச் செய்யவேண்டிய பரிகாரங்களை யோசித்து, கண்டுபிடித்து, தீர்மானித்து அதைக் காரியத்தில் செய்ய முன்வந்தும், செய்துகொண்டும் இருக்கிருர்கள்.

அரும்பாடுபட்டு Pencillin Steptomijis முதலிய அபூர்வமான, ஆனால் ஏராளமாய் கிடைக்கக் கூடியதான மருந்துகளைக் கண்டுபிடிக்கக்கூடிய நிபுணர்கள் இருக்கும்போது, நம் நாட்டில் இப்பொழுது இருக்கும் நிலையை சீர்திருத்த வேண்டிய மருந்தை கண்டுபிடிக்கக் கூடிய நிபுணர்கள் இல்லாமல் போகவில்லை. வழிகளைக் கண்டு பிடித்தார்கள். அதை உபயோகிக்க முயற்சிக்கின்றார்கள். ஆனல் நிலைமை மாறவில்லை. இதற்குக் காரணம் என்ன? எங்கோ ஓரிடத்தில் அல்லது பல இடங்களில் சில குறைகளோ, பல குறைகளோ இருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது. Pencillin Septimysis கண்டுபிடித்தாலும் கண்டுபிடித்த வழிகளில் உற்பத்தி செய்யாதுபோனலும், உற்பத்தி செய்ததை பரவுவதற்கு வேண்டிய வழிகள் செய்யாவிட்டாலும், அதன் டாக்டர்கள் அதை உபயோகிக்காவிட்டாலும், அல்லது பிணியாளி அதை எடுத்துச் சரியாக உபயோகிக்காவிட்டாலும், இதில் யாதொருவர் அஜாக்கிரதையாக இருந்தாலும் மற்ற எல்லா முயற்சிகளும் வீணகத்தான் போகின்றன. இதே மாதிரி நம் நாட்டில் பேரறிவுள்ள தலைவர்கள் ஆலோசித்துச் செய்த வழிகளில் தவறு இருந்தாலும், தவறில்லாதிருந்து அதை நம் அரசாங்கம் பின்பற்றும் ஆற்றல் இல்லாதிருந்தோ, அல்லது பின்பற்றினலும், அதை உபயோகிக்கக்கூடிய மற்றவர்கள்—அதாவது—தொழிலாளர்கள், மூலதனம் வைத்திருப்பவர்கள், அதிகாரிகள், மற்றும் உள்ள எல்லாரும் ஒழுங்காக அவற்றைச்

செய்ய ஒற்றுமை இல்லாதிருந்தாலும், எல்லா முயற்சிகளும் வீணவதும் தவிற, இந்த நிலைமை இன்னும் மோசமாய்த்தான் போய்க்கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்போது இந்த நிலைமையை தவிர்க்க தீர்மானித்த வழிகளில் குறைகள் இருக்கலாம். அதைக் கொண்டு செலுத்த ஒழுங்கான அதிகாரிகள் கிடையாததினுலோ இருக்கும் அதிகாரிகள் ஒழுங்காக இல்லாததினுலோ, அரசாங்கத்தின்மேலும் எந்த வழிகளையும் ஒழுங்காக அமல் நடத்தவில்லை என்ற பழியையும் சுமத்தலாம். முதலாளிகள் தொழிலாளிகளைச் சரியாக நடத்தவில்லை என்று எப்பொழுதுமே தொழிலாளிகள் சொல்லிக்கொண்டிருக்கலாம் இதேமாதிரி முதலாளிகளும், தொழிலாளிகள் கெட்டுப்போய்விட்டார்கள், நாங்கள் சரியாக லாபத்தை உறிஞ்ச முடியவில்லை என்றும் சொல்லிக்கொண்டிருக்கலாம். இந்தத் தப்புகள் யாரிடம் இருந்தாலும் இருக்கலாம். இவை திருந்துவது எப்படி? ஒருவரால் மற்ற எல்லோரையும் திருத்த முயல்வது உலகத்தில் இயலாத காரியம். ஆனுல் அவரவர்கள் முயற்சியினல் திருத்திக்கொள்வதற்க இருந்தால் மிகச் சுலபமாக உலகம் முழுவதையும் திருத்திவிடலாம், ஒருவர் மற்றவர் திருந்தட்டும் என்று நினைக்கும்வரை எதுவும் திருந்தப்போவதில்லை. பொதுஜனங்கள் தாமே திருந்திக் கொள்ளட்டும், அதன் பின்பு நாம் திருந்திக்கொள்ளலாம் என்று அரசாங்கம் நினைத்தால், அது அரசாங்கத்தின் அழிவுக்கு அடிகோலியாகும். பொதுஜனங்களும் அரசாங்கம் திருந்தட்டும் அதன்பின் நாம் சரியாக நடந்துகொள்ளலாம் என்று இருந்தால் அதுவும் தங்கள் அழிவுக்கே முதல்படி ஆகும்.

இவை எல்லாவற்றையும் விட மிக நெருங்கிய சம்பந்தமுடைய தொழிலாளர்களும், முதலாளிகளும்—முதலாளிகள் என்றுல் தொழில்கூடம் வைத்திருப்பவர்களும், நிலம் வைத்திருப்பவர்களும்—ஒருவர்க்கு ஒருவர் நம்பிக்கையின்றி வேற்றுமை மனப்பான்மையோடு இருக்கும்பட்சத்தில் நாட்டினுடைய அழிவுக்கு அஸ்திவாரம் வேறு வேண்டியதில்லை.

இன்று முதலாளிகள் எனப்படுவோர் ஒவ்வொருவருக்கும் எத்தனை பஞ்சாலைகள் இருக்கின்றன. எத்தனை பஸ் சர்வீஸ்கள் இருக்கின்றன, எத்தனைசுரங்கங்கள் இருக்கின்றன, எத்தனை கார்கள் இருக்கின்றன, பாங்கிகளிலோ பிரீ இடங்களில் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ எவ்வளவு நூறு ரூபாய்கள், ஆயிரம் ரூபாய்கள் லக்ஷம் ரூபாய்கள் கோடி ரூபாய்கள், கவர்மெண்டால் அச்சடித்த காகிதமாகமோ, ஆப்பிரிக்காவிலும் பிற விடங்களிலும் இருந்துவந்த தங்கமாகவோ, வைடூரியமாகவோ இருக்கின்றன, இன்னும் எவ்வளவு சுறண்ட வேண்டியிருக்கின்றது, எங்கிருந்து எவரிடமிருந்து என்ற இந்த கணக்குகளை போட்டுக்கொண்டு இருக்கும்போது, எவ்விதத்தில் அவர்கள் தொழிலாளருடைய நம்பிக்கைக்கும் அன்புக்கும் முழு ஆதரவுக்கும் பாத்திரமாவார்கள். இந்தமாதிரி மனப்பான்மை, எந்தக் காலத்திலோ யாராலோ, கண்டுபிடிக்கப்பட்டு முதலாளிகள் என்பவரிடம் யாருக்கும் தெரியாமல் யாரும் சொல்லாமலே புகுந்துவிட்டது. இன்று உலகத்தில் இருக்கும் மக்கள் யாவரும் ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்திருக்கும் சமயத்தில் இந்தக் காகிதமும் இந்தத் தங்கமும், இந்த வைடூரியங்களும் மற்ற செல்வங்களும், இப்போது இருக்கும் மனப்பான்மையில் ஒன்றுக்கும் ஆகாது என்று அறியாது அநேகர் இருக்கிருர்கள், என்பது உண்மை. இந்தக்காலத்தில் ஒரு முதலாளி

என்பவர், மேற்சொன்ன காகிதங்களோ, வீடுகளோ, நகை நட்டுகளோ தன்னிடம் தன் சொந்தம் என்று வேறு எதற்கும் உபயோகப்படுத்தாமல் வைத்திருப்பவன் அன்று. அவன் அநேகம் தொழிலாளிகளுடைய விரோதி. இந்தக் காலத்தில் எவனொருவன் தொழிலாளர்களுடைய அன்பைப் பெற்று, ஆதரவைப்பெற்று, தானும் ஒரு' தொழிலாளி என்று கருதி அந்த நிலைமையில் எவனொருவன், தன்து திறமையால், மற்ற தொழிலாளிகளுக்கு ஏதாவது ஒரு வகையில் அதிகமாக உதவியோ அல்லது லாபமோ கொடுக்கின்றவன்தான் முதலாளி என்று சொல்லத் தக்கவனாகின்றான். இந்த மனப்பான்மை தொழில் தலைவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உண்டானால் ஒழிய, அரசாங்கமே தொழிலை எடுத்து நடத்தினாலும் அல்லது இப்போது இருக்கும் தொழில் தலைவர்களே இப்போது இருக்கும் நிலைமையில் நடத்தினாலும், இன்றிருக்கும் நிலைமையிலிருந்து பின்னேறுவோமேயொழிய முன்னேறுவதில்லை.

இவைகள் எல்லாவற்றிலும் முக்கியமானது தொழிலாளர்களுடைய மனப்பான்மை; இன்று தொழிலாளர்களுடைய மனப்பான்மை கொஞ்சகாலத்துக்கு, முன் இருந்ததைவிட கொஞ்சம் மாறி இருக்கின்றது என்பது யாவரும் அறிந்த விஷயம். ' அரசாங்கத்தாரும், மூலதனத்தாரும்,பொதுமக்களும், மனப்பான்மையில் மாறி இருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் தாங்கள செல்வதற்காக செய்துகொண்ட பாதைகள் முள் நிறைந்த பாதைகளாகவே செய்துகொண்டிருக்கிறார்கள்.

இப்போது நான் சொல்லப் புகுவது தொழிலாளரைப் பற்றியது ஒன்றுதான். தொழிலாளர்களிடம் பொதுவாகக் குடிகொண்டிருக்கும் மனப்பான்மை தேசம் முழுவதும் பொதுவுடமையாகவேண்டும் என்ற ஒரே கருத்துத்தான். ஆனால் தொழிலாளர்களோ மற்றவர்களோ தாம் பொது உடமைக்கு தகுதியானவர்களாக இருக்கின்றார்களா? பொது உடமைக்குத் தகுந்த மார்க்கத்தில் நடக்கின்றார்களா? இன்னவழிதான் தப்பில்லாத வழி என்று தொகுத்து அதை அறிந்திருக்கிறார்களா? அது மட்டும் இல்லை. ருஷியாவில் பொது உடமை இருக்கின்றதாக சொல்லுகின்றார்கள். ஆனால் நான் கொஞ்சகாலத்துக்குமுன் போயிருந்தபொழுது, அங்கு போவதற்கு முன் ரஷ்யாவின் பொது உடமை பற்றி புஸ்தகங்களில் நான் படித்தவையோ மற்றவர்கள் எனக்கு இங்கு சொன்னமாதிரியோ நான் அங்கு காணவில்லை. நேரில் கண்டது ஹிட்லருடைய பெரிய அண்ணனின் அரசாட்சியைத்தான். நான் பொது உடமைக்கு விரோதியல்ல. ஆனால் ஒன்று சொல்வேன் ஹிட்லர் அரசாக்ஷியோ ஸ்டாலின் அரசாட்சியோ ஐரோப்பாவிலுள்ளவர்களுக்கு உகந்தது அல்ல. ஆனால் நம் நாட்டுக்கு ஒரு வகையில் உகந்தே ஆகும், இன்று நம் இந்தியாவிலுள்ளவர்களுக்கு ஒரு ஒழுங்கு, ஒரு ஒற்றுமை, ஒரு நேர்மை என்பவற்றை போதிப்பதற்காக ஹிட்லரையோ ஸ்டாலினையோ நம் காங்கிரஸ் கவர்மெண்டு அழைத்துக்கொண்டு வரும் பட்சத்தில் நான் முதலில் வரவேற்பேன். ஆனால் அவர்கள் கைக்கொண்டிருக்கும் நாஸிஸத்தையோ பொது உடமையையோ இங்கு கொண்டுவர யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இங்குள்ள தொழிலாளர்களில் அநேகர் அங்கே சென்று நேரில் பார்த்தோ அல்லது பார்த்தவர்களைக் கேட்டோ உண்மையை அறிந்திருப்பார்களாயின் அவர்களில் ஒருவர்கூட இந்தப் பொது உடமையை அங்கீகரிக்க

மாட்டார்கள். புஸ்தகங்களைப் படித்துப்பார்த்தோ, அல்லது நேரில் சென்று, குருட்டு மோகத்தில் பார்த்து மயங்கி இருப்பவர்களின் போதனைகளைக் கேட்டோ இருப்பவர்கள் வேண்டுமென்று—அந்தப் பொது உடமை மனப்பான்மை பால் குடித்துக்கொண்டும் அதைப் புகழ்ந்து கொண்டும் இருக்கலாம். அவர்கள் சொல்லுகின்ற மாதிரி இங்கு இருக்கும் முதலாளிகளை பூருவும் ஒடுக்கி விட்டால் அல்லது இங்கு இருக்கும் எல்லாவற்றையும் கவர்மண்டாரே பொது உடமையாகச் செய்து எல்லாருக்கும் பங்கிட்டுவிட்டால், எல்லாம் சரியாய்விடும் என்று சொல்வது இந்த நாட்டில் இந்த நிலைமையில் சரியாகுமா? இப்போது இருக்கும் முதலாளி என்று சொல்லப்படுபவர் சுமார் 30 அல்லது 40 ஆயிரம் பேர் இருக்கலாம். இவர்மள் சொத்தை எடுத்து 40 கோடி மக்களுக்கும் பிரிக்கும்போது என்ன தான் வரும் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். தொழிலாளிகளின் ஒற்றுமையும், பகுத்தறிவும், விரிந்த மனப்பான்மையும் பெறுகுவதற்கு முன் இந்தத் தொழில்கள் ஒரு சில முதலாளிகளிடம இருந்தாலும் அல்லது கவர்மெண்டிடம் இருந்தாலும், இந்த தொழிலாளிகள் பெறப்போவது ஒன்றுமே யில்லை என்பது திண்ணம்.

(அடுத்த இதழில் முடியும்)

★

வரவேற்கிறோம்.

நடிப்புப் புலவர் K. R. இராமசாமி, கலைவாணர் N. S. கிருஷ்ணன், கலைவாணி K. B. சுந்தராப்பாள் ஆகியோர்கள் நமது பத்திரிகை வளர்ச்சிக்காக உதவி நிதி திரட்டி உதவுவதாக வாக்களித்துள்ளார்கள்.

அக்கலைஞர்களுக்கு அதற்காக என் ஆழ்ந்த நன்றிகள் பல.

— ஆசிரியர்

PHONE: 3202.
M.C. APPASAWMY CHETTY & CO.
TRI-COLOUR. HALF-TONE & LINE BLOCK MAKERS.
14, JONES ST, MANNADY, MADRAS.

அலறிய அருவம்

— B. சோமசுந்தரம் B. A., —

1

அது ஒரு குக்கிராமம். அக்கிராமத்தின் வடகோடியில் இருந்த பெரிய வீடு எல்லோருக்கும் ஓர் மர்மமாகவே இருந்தது. அவ் வீட்டைச் சுற்றி சிறிது தூரத்திற்கு வேறு வீடுகள் இல்லை. அவ்வளவு பெரிய வீட்டில் குப்புசாமி தன்னந் தனியனாய் வாழ்ந்து வந்தான். அவனுக்கு உற்றார் உறவினர் யாவரும் இருந்ததாகத் தெரியவில்லை. அவன் வீட்டை விட்டு வெளியே போகும் போதெல்லாம் அதி ஜாக்கிரதையாக ஜன்னல் கதவுகளெல்லாவற்றையும் இறுக மூடித் தாளிட்டு முன் கதவைப் பூட்டிக்கொண்டு தான் போவான்.

எவ்வளவோ பேர் அவனிடம் அவ் வீட்டை வாடகைக்குக் கேட்டிருக்கிறார்கள். "நீ தனியாய்த் தானே இருக்கிறாய்? இவ்வளவு பெரிய வீடு உனக்கெதற்கு? இதை வாடகைக்கு விட்டுவிட்டு, நீ ஒரு சிறிய வீட்டிலிருக்கலாமே!" என்று பலபேர் அவனுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், "வீட்டை வாடகைக்கு விடும் பேச்சு மாத்திரம் என்னிடம் பேசாதீர்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான் குப்புசாமி.

குப்புசாமியைப் பற்றியும், அவனது வீட்டின் மர்மத்தைப்பற்றியும் பலவித வதந்திகள் ஆரம்பமாயின. ஒரு விஷயத்தை மூடிவைக்க, மூடிவைக்க விபரீத அனுமானங்கள் தோன்றல் இயற்கைதானே! பார்த்தான் குப்புசாமி; உண்மையைச் சொல்லிவிடுவதுதான் உசிதமென்று எண்ணினான் போலும். பலரிடம் அவ்வீட்டின் மர்மத்தைச் சொல்ல முற்பட்டான்.

2

'மோஹனன் என்று எனக்கு ஒரு நண்பன் இருந்தான். என்னைப் போல் அவனும் குடும்பத் தலையின்றியிருந்தான்; சுமாராகச் செல்வமும் சேர்த்து வைத்திருந்தான். சூதாடுவது அவனிடம் ஓர் கெட்ட பழக்கம். சூதாட்டத்தில் அவனைப் போல் சாமர்த்தியமாக ஜெயிப்பவர்கள் மிக அரிது 'சூதாட்டத்தில் சாமர்த்தியம் என்ன வந்தது, அதிர்ஷ்டம் தானே தோல்வியையும், ஜெயிப்பையும் கொடுப்பது' என்று நீங்கள் கேட்கலாம். அதுதான் இல்லை. சூதாட்டத்திலும் சூது செய்வதைத்தான் நாம் சாமர்த்தியம் என்கிறோம். நிற்க, அவன் ஒரு

தடவை வேற்றூரில், மதனன் என்பவன் ஒருவனுடன் சூதாட்டத்தி லீடுபட்டிருக்கும்போது, மதனனுக்கும் இவனுக்கும் வாய் வார்த்தை முற்றி கைகலந்தனர். மோஹனன், மதனனை ஆவேசத்துடன் உந்த, மதனனின் தலை பலமாகப் பக்கத்திலிருந்த தூணில் இடித்து உதிரம் ஆறுகப்பெருக ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் மதனன் பேச்சு மூச்சற்றுக் கீழே சாய்ந்தான். இச் சம்பவம் நடக்கும்போது நானும் அங்கிருந்தேன். மதனன் மூக்கருகில் விரல் வைத்துப் பார்த்தோம். மூச்சிருப்பதாகத் தெரியவில்லை, என்று சொல்லிக் குப்புசாமி சாவதானமாக வெற்றிலை மடித்துப்போட ஆரம்பித்தான்.

"அப்புறம், அப்புறம்......" என்று சுற்றியிருந்த பலரும் ஆவலுடன் வினவினர்.

"அப்புறம் என்ன? மோஹனனுக்கும் எனக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. யாரும் பாராவண்ணம் அங்கிருந்து கிளம்பி அவ்வூரை விட்டே அகன்று சென்னைக்குச் சென்ருேம். எங்கு சென்றும் மோஹனனின் மனம் சாந்தியடையக்காணேம். அடிக்கடி மதனன் உருவம் அவன் கண்முன் தோன்றி அவனைப் பயமுறுத்தும். அதுவுமல்லாமல் விஷயம் போலீசுக்குத் தெரிந்தால் என்ன செய்வது என்று பயம் வேறு. அவனது குற்றமுள்ள நெஞ்சும், அளவற்ற பயமும் அவனை உந்த ஓர் நாள் திடீரென்று கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டான்".

குப்புசாமி கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் ஆரம்பித்தான்.

"கடலில் விழுந்தவனின் உடலும் கூட திரும்பக் கிடைக்கவில்லை. இச் சம்பவங்களினுல் மனம் இடிந்த நான் எங்கெங்கோ அலைந்துவிட்டுக் கடைசியில் இக் கிராமத்திற்கு வந்து இவ் வீட்டை வாங்கி இங்கேயே வாழ்ந்து வருகிறேன்" என்று சொல்லிச் சிறிது நிறுத்தினுன் குப்புசாமி.

"இச் சம்பவங்களுக்கும் இவ் வீட்டிற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டனர் பலர்.

"ஆம், அதுவும் சொல்லத்தான் வேண்டும். இந்த வீட்டிலாவது நடந்தவைகளை மறந்து நிம்மதியாகக் காலம் கழிக்கலாமென்று நான் எண்ணிய எண்ணங்களிலெல்லாம் மண் விழுந்தது. கடலில் விழுந்த என் நண்பனின் ஆவி அடிக்கடி வந்து நான் இருக்கும் வீட்டில் உலவ ஆரம்பித்தது. நான் அடைந்த பயத்திற்களவேயில்லை. நான் அடைந்த பயம் அதற்குத் தெரிந்து விட்டதுபோலும். அது என்னைப் பயப்படாமல் இருக்கும்படியும், தான் ஒரு தீங்கும் செய்யாது என்றும், எக் காரணத்தைக்கொண்டும் நான் அவ் வீட்டைவிட்டுப் போகக் கூடாதென்றும் சொல்லிற்று. அதே பிரகாரம் அங்கேயே நான் இருந்து வருகிறேன்" என்று முடித்தான் குப்புசாமி.

"இன்னமும் அப்பைசாசம் அங்கு வந்து உலவுகிறதா?" என்று பயத்துடன் கேட்டனர் பலர்.

"சந்தேகமென்ன?" என்று சொல்லி எழுந்து சென்ருன் குப்புசாமி.

3

கோபாலன் அக்கிராமத்திற்குப் புதிது எல்லோரையும் கவனத்தையும் ஆகர்ஷித்த அந்த வடகோடி வீடு அவன் கண்ணில் மாத்திரம் படாமலிருக்குமா? கிராமத்தார்களையெல்லாம் அவ் வீட்டு மர்மத்தைப் பற்றிக் கேட்டான். குப்புசாமி

சொன்ன சவிஸ்தாரத்தைத் தான் அக் கிராமத்தாரும் கோபாலனிடம் சென்றுர்கள். கோபாலன் இம் மர்மத்தின் வரலாற்றை அறிவதில் அளவு மிகுந்த ஊக்கமும் ஆவலும் காட்டினுன். பலரையும் பலவிதக் குறுக்குக் கேள்விகளைக் கேட்டு, விபரமெல்லாம் ஆதியோடந்தமாகத் தெருந்து கொண்டான்.

கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் அகற்றிக்கொள்ள எண்ணினுன் கோபாலன். குப்புசாமியையே நேரில் இவ் விருத்தாந்தத்தைக் கேட்டு விடுவதென்று முடிவு கட்டினுன். அன்றியும், பேயையும் நேரில் காணவேண்டி ஆசைப்பட்டான் கோபாலன்!

அன்று அமாவாசைத் தினம். இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். கோபாலன் தனியாக மர்ம வீட்டிற்குச் சென்றுன்: முன் கதவு வழக்கம்போல் மூடியிருந்தது. மெதுவாகத் தட்டினுன் கோபாலன். குப்புசாமி அவசர அவசரமாகக் கதவைத் திறந்தான்.

"ஐயா தாங்கள்தானே குப்புசாமி என்பது?''

"ஆம், ஏன்?''

"இந்த வீட்டில்தானே பிசாசு உலவுவதாகச் சொல்லுகிறுர்கள்?''

"ஆம், ஏன்?'' குப்புசாமியின் தொனியில் சிறிது கலவரம் ஏற்பட்டது.

"இல்லை, இவ்வீட்டிலுலவும் அருவத்தின் சகல விபரங்களையும் கிராமத்தார் சொல்லக் கேட்டேன் எனக்கு மிகவும் ஆச்சரியமாய்ப் போயிற்று. இவ் வுண்மையைத் தங்களிடமே கேட்டறிய ஆவலாகி வந்தேன்.''

"ஏன், கிராமத்தார் சொன்னதில் ஆச்சரியப்படக்கூடியவாறு என்ன இருக்கிறது?''

"உண்மையைச் சொல்லவேண்டுமென்றுல், எனக்குப் பேய், பிசாசு இவைகளில் எப்போதுமே நம்பிக்கையில்லை.''

"ஆனுல்......இங்கு ஆவி உலாவுகின்றது என்பதை நீங்கள் நம்பவில்லையா?''

"நான் நேரில் கண்டாலொழிய' எனக்கு நம்பிக்கை ஏற்படாது.''

குப்புசாமி மனதில் சட்டென்று ஏதோ தோன்றிற்று.

'இன்று அமாவாசையல்லவா?' என்று கேட்டான் குப்புசாமி பரந்த விழிகளுடன்.

"ஆம்''

"நல்ல நாள் பார்த்துத்தான் வந்திருக்கின்றீர்கள். இன்று கண்டிப்பாக அந்தப் பிசாசு இங்குவரும். சரியாக இரவு பன்னிரண்டு மணிவரை இருந்தீர்களானுல் ஆவியை நீங்கள் பார்க்கலாம்.........அதிருக்கட்டும், உண்மையில் நீங்கள் பயப்படமாட்டீர்களே?''

"பயப்படுபவனுயிருந்தால் நான் எதற்கு இங்கு வருகிறேன்?''

இருவரும் வெளித் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அடிக்கடி குப்புசாமி வீட்டிற்குள் போவதும் வருவதுமாயிருந்தான். மணி ஆச, ஆக இருவர் மனதிலும் ஆவலும் ஒருவிதத் திகிலும் ஏறிக்கொண்டே போயின.

மணி சரியாகப்பன்னிரண்டடித்தது. சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. பின்னர் அந் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு தட தடவென்று கதவுகள் திறக்கப்படும் சப்தம் போன்று ஓசை திடீரென்று

கேட்டது. கோபாலனும், குப்புசாமியும் திடுக்கிட்டு ஜன்னல் வழியாக உள் நோக்கினர்.

,ஆவி வருகிறாற் போலிருக்கிறது' என்று காதோடு காதாயச் சொன்னான் குப்புசாமி.

மற்றும் சிறிது நேரம் நிசப்தம்.

'அதோ......அதோ......ஆவி...' இது குப்புசாமியின் அலறல்.

கோபாலன் கூர்ந்து கவனித்தான் ஆம், பிசாசு தான் தலையிலிருந்து கால் வரை மெல்லிய தோர் உடையணிந்து ஓர் உருவம் மெதுவாக ஓர் பக்கத்திலிருந்து நடந்து வந்து கொண்டிருந்ததைக் கண்டனர். இருவருடைய நெஞ்சுகளும் திக் திக்கென்று அடித்துக்கொண்டன.

''ஐயோ...பயமாயிருக்கின்றதே'' என்று அலற ஆரம்பித்தான் கோபாலன்.

குப்புசாமி அவனைக் கையைப் பிடித்து நடத்தி அவ்வீட்டிலிருந்து கூட்டிச் சென்று கோபாலனது சிநேகிதன் ஒருவன் வீட்டுவரைக் கொண்டுவந்து விட்டுச் சென்றான்.

போகுமுன் ''பார்த்தீர்களா, கோபாலன், நான் சொன்னபொழுது நீங்கள் கேட்கவில்லை.......இப்பொழுது உங்களுக்கெவ்வளவு பயமும், திகைப்பும் ஏற்பட்டன!'' என்றான் குப்புசாமி.

''ஆம் ஐயா, இதுவரை பேய், பிசாசு என்பதிலேயே நம்பிக்கையில்லாமல் தானிருந்தேன் இன்று தான் உண்மைப் பிசாசைக் கண்ணாரக் கண்டிருக்கின்றேன். அப்பப்பா.......பயங்கரம்.........நான் இந்தக் கிராமத்தில்கூட இனி இருக்கமாட்டேன்.''

அதன் பிரகாரமே, மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக கோபாலன் அக் கிராமத்தைவிட்டு ஓடிவிட்டான். பலநாள் வரையில் அக் கிராமத்தில் இதே பேச்சாக இருந்தது.

4

மேற் சொன்ன சம்பவங்கள் நடந்து சரியாக ஒரு மாதமாயிற்று. அன்றும் அமாவாசை தினமே. இரவு சுமார் பத்து மணியிருக்கும். மர்ம வீட்டில் குப்புசாமி படுத்துறங்கப்போகும் சமயம். யாரோ வெளியிலிருந்து மெதுவாகக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. குப்புசாமி முனகிக்கொண்டே கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! கோபாலன் நின்றுகொண்டிருந்தான் வாயிலில்.

''அடடா, கோபாலனா, என்ன நீங்கள் இங்கு மறுபடியும் வந்திருக்கிறீர்கள்?... அதுவும் அமாவாசை தினத்தன்று''

''ஐயோ,இன்று அமாவாசையா? ஞாபகமில்லாமல் வந்துவிட்டேனே'

''நான் தங்களைத் தங்கள் நண்பர் வீட்டுவரை கொண்டு விட்டு வரட்டுமா?''

''வேண்டாம். தாங்களிருக்கும் போது எனக்கென்ன பயம்?...... ஆனால் வீட்டினுள் மாத்திரம் வரமாட்டேன். இங்கே வெளித் திண்ணையின்மேலேயே படுத்துக்கொள்ளலாம். நீங்களும் எனக்குத் துணையாக இஙகேயே தயவு செய்து படுத்துக் கொள்ளவேண்டும். என்னால் தங்களுக்கெவ்வளவு சிரமம்?''

''எனக்கொன்றும் சிரமமில்லை. தாங்கள் தான் பயப்பட்டு விபரீதமாக ஏதாவது நடந்துவிடுமோ என்று திகிலாய் இருக்கிறது.''

''என்னாலானவரை நான் தைரியமாகவே இருக்கிறேன்''

மணி பதினொன்றரை, பதினொன்றே முக்கால் என்று ஏறிக்கொண்டே போயிற்று. பனிரெண்டும் அடித்

தது. கிரீச்சென்ற சப்தம் நள்ளிர வின் நிசப்தத்தைக் கிழித்தது. முன் போலவே ஓர் உருவம் வீட்டினுள் ஓர் பக்கத்திலிருந்து கிளம்பி மெது வாய்வந்துகொண்டிருந்தது. கோபா லனும், குப்புசாமியும் திறந்த விழி களுடனும், அடித்துக்கொள்ளும் நெஞ்சுகளுடனும் பார்த்துக்கொண் டேயிருந்தார்கள்.

இருந்திருந்தாற்போல் கோபா லன், குப்புசாமியை இறுகக் கட்டிக் கொண்டு, ''அதோ...அதோ...அந் தப்பக்கம் இன்னெரு பிசாசு'' என் று கதறினன்.

குப்புசாமி அப்பக்கம் திரும்பி னன். என்ன ஆச்சரியம்! முதல் உருவமேபோன்று இன்னெரு உரு வம். வீட்டின் மறுபக்கத்திலிருந்து வந்துகொண்டிருந்தது. புது உருவத் தைக் கண்டவுடன் தன்னையுமறியா மல் ''ஐயோ'' என்று கூச்சலிட் டான் குப்புசாமி. அவனது உடம் பெல்லாம் வியர்த்தது; நாவெழவில் லே.

கோபாலன், குப்புசாமியையும், பிசாசுகளேயும் மாறி மாறிப் பார்த் தான். அவனுடைய பயமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது போலும்.

'' ம...ம...மத...மதனின்...ஆவி'' என்று நாக்குளறக் கத்தினன் குப்பு சாமி.

அப்பொழுது இன்னமுமொரு ஆச்சரியம் நிகழ்ந்தது. அதாவது முதல் பிசாசு, அதாவது மோஹன னின் ஆவி. இரண்டாவது பைசா சம் தோன்றியவுடன், ''ஐயோ'' என்று கதறிக்கொண்டு குப்புசாமி கோபாலன் இருந்த பக்கம் ஓடி வந் தது. கோபாலன் தைரியத்தை யெல்லாம் வரவழைத்துக்கொண்டு அலறி ஓடிவந்த அருவத்தைத்தாவிக் கட்டிப் பிடித்துக் கொண்டான்! பிசாசை அதட்டவும் ஆரம்பித் தான்!

''ஏய் பிசாசே, எங்கே ஓடுகி ருய்? நில். நான் விடமாட்டேன்'' என்று சத்தம் போட்டான் கோபா லன்.

''ஐயையோ, நான் பிசாசல்ல. நான்....நான்......மோஹனன்...... ஐயோ அந்தப் பிசாசு என்னைச் சும்மாவிடாதே! என்ன செய்வேன்? என்று அழுதது முதல் உருவம்.

''டேய், குப்புசாமி, அயோக்யப் பயலே, தப்பித்துக் கொண்டாய் என்ரு நினைத்துக் கொண்டிருக் கிருய்?'' இது இரண்டாவது பிசா சின் தொனி.

''ஐயோ, நான் செய்ததெல்லாம் தவறு....என்னை ஒன்றும் செய்யா தே......மன்னித்துவிடு'' இது குப்பு சாமி கெஞ்சியது.

இரண்டாவது பிசாசு: ''டேய், குப்புசாமி, நீ மோஹனனை ஏமாற் றியது எனக்குத் தெரியாதென்ரு நினைக்கிருய்? என்னைக் கொன்ற தும் நீதான், மோஹனன் அல்ல, என்பதும் எனக்குத் தெரியாதா? உன் உலகத்திற்குத் தெரியாமலிருக் கலாம். ஆனல் நான் பழிக்குப் பழி வாங்கும்வரை சாந்தியடைய மாட்டேன். முதலில் நீ, மோஹன னுக்குச் செய்த துரோகத்தையும், அவனைப் பிசாசென்று சொல்லி, மறைந்தொழுகச் செய்ததையும் ஒப் புக்கொள்...உம்...'' என்று கண் டிப்பான குரலில் கட்டளையிட்டது இரண்டாவது பிசாசு,

''ஒப்புக் கோள்ளுகிறேன். என்னை மாத்திரம் ஒன்றும் செய்ய வேண் டாம். அன்று மோஹனன் உன்னை மோதியதில் நீ இறந்து விட்டாய் என்றே எண்ணினன் மோஹனன் ஆனல் நீ மறுபடியும் எழுந்ததை நான் பார்த்தேன் நான் தான் இரண் டாவது தடவையாக உன்தலையைத் தூணில் மோதிகொன்றேன். உன் பையில் வைத்திருந்த ரொக்கத்தை அபகரிக்கவே அவ்விசம் செய்தேன்

ஆனால் மோஹனன், தான்தான்உன் னைக் கொன்றதாக நினைத்துக் கொ. ண்டிருந்தான்' அதைப் பயன் படுத் திக்கொண்டு அவனையும் மிரட்டி, அவளை இந்த வீட்டிலேயே மறை ந்து வாழச் செய்தேன். பலருடைய சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அவன் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகவும், அவனு டைய ஆவி இவ்வீட்டிலுலாவி வரு வதாகவும் கதை கட்டினேன். நான் செய்த தெல்லாம் தப்பு.'' என்று குப்புசாமி சொல்லிக் கொண்டிருக் கும் போதே, அந்த இரண்டாவது பிசாசு—மனிதன்பிசாசு—வாய்விட்டு பலமாக சிரித்தது.

மேலும் அது சொல்லிற்று: "அடே அயோக்கியா, நீ கொன்று விட்டதாக நினைத்த நான் உண்மை யில் சாகவில்லை குற்றுயிராய்கிடந்த என்னை இறந்து விட்டதாக எண்ணி நீங்கள் இருவரும் ஏமாந்தீர்கள். நீ இங்கிருந்து செய்துவரும் திரு விளையாடல்களை, நான் என் வேலே யாள் கோபாலன் மூலம் உளவறி ந்து உன் குற்றத்தை வெளிப்படுத்த வே இந்த ஏற்பாடு செய்தேன்.''

அப்பொழுதுதான் இரண்டாவது உருவமும் பேயல்ல, சாகாமற் திரு திரும்பி வந்த மதனனே அவன் என்று தெரிந்தேன்.

இரங்குகின்றோம்.

நமது ஆருயிர்த் தோழரும், கோவை மாவட்ட திராவிடர் கழக அமைப்பாளருமாகிய கோபி, தோழர். ஜி. என். இராஜு அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. நாகம்மாள் அவர்கள் சென்ற 4-12-48ல் இயற்கையெய்தியது குறித்து பெரிதும் வருந்துகிறோம்

— ஆசிரியை.

R. தாசன் ஸ்டுடியோ

அவிநாசி ரோடு, கோயமுத்தூர்.

சிறந்த போட்டோக்களுக்கு அமைச்சூர் வேலை களுக்கும் ஏற்ற இடம்.

குறித்த காலத்தில், குறைந்த சார்ஜில், கலர் போட்டோக்களும், என்லார்ஜ் மெண்டுகளும் செய்து கொடுக்கப்படும்,

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்

உரிமையாளர்:-

R. தாசன் ஸ்டுடியோ. கோவை

தமிழ் ஆண்டு பிறப்பு,
தைத் திங்கள் வாழ்த்து.

★ ★ ★ உடுமலை, கவி பூமிபாலகதாஸ் ★ ★ ★

இராகம்-பிலஹரி. தாளம்-ரூபகம்

சுருள் மகுடம்.

பொங்கலோ பொங்கல்—பூமணம் கமழும் தைப் (பொ)

பூந் தமிழர் வருடப் பிறப்பு
மாந்தர் மகிழ் பருவச் சிறப்பு (பொ)

பூமத்திய ரேகையின் வடபால்
ஆதித்தனும் மேவிய திருநாள் (பொ)

பூளை வேம்பு கூறை சூடி
காளை மாடு போர் கொண்டாடி (பொ)

பூப்பறித்துக் கன்னிமார்கள்
ஆர்ப்பரித்து நல்ல சீர்கொள் (பொ)

சரணம்.

மங்களங் கோவை முரசு பல்லாண்டு
வாழ்க இயற்கை வரந்தரவேண்டு
சங்கத் திராவிடத் தாயன்பு பூண்டு
தமிழா எழுந்திரு
அமிழ்தே சுகந்தரும் (பொ)

ஜூபிடரின் வேலைக்காரியில்

திரு. K. R. ராமசாமி



N. S. கிருஷ்ணன்

நல்லதம்பியில்

T. A. மதுரம்

கோவை C. S. & W. ஆலை வைர விழாவில்

சென்னை நகராண்மைக் கழகத் தலைவரின்

பேருரை.

கோவை C. S. & W. ஆலையின் வைர விழா கொண்டாட்டத்தில் (15—12—48) மாலை 3-30 மணிக்கு சென்னை மேயர் திரு S. இராமசாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய சொல்லோவியம் வருமாறு:-

அன்பர்களே! பெரியோர்களே! அறிவியக்கப் புலவர்களே! இந்த ஆலையின் அறுபதாவதாண்டு இன்றுடன் முடிகிறது. அதை நினைவுபடுத்த இந்தப் பெருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்பது ஆலைக்கு சம்பந்தப்பட்டவர்களின் நினைப்பாகும். இந்த விமரிசையான விழாவில் என்னைத் தலைமை தாங்கவேண்டுமென விழைந்து அவ்வரிய பேறை எனக்களித்த நிர்வாகிகளுக்கு என் ஆழ்ந்த நன்றி. இந்த ஆலையின் நிர்வாகி, திரு. கிருஷ்ணன் அவர்கள் எனக்கு நீண்டதோர் வரவேற்பிதழை வாசித்தளித்தார். அதில் என் வாழ்க்கைக் குறிப்புகள் பொறிக்கப்பட்டுள்ளன. நான் உங்கட்குப் புதியவனல்ல; பழமையானவன் எனினும் எனக்குத் தெரிந்தவற்றை இவ் விழாவில் சில சொல்ல ஆசைப்படுகிறேன். திரு. கோபால் நாயுடு அவர்களை நீங்களுமறிவீர்கள்; நானும் தெரிவேன். நீங்கள் எந்தக் கண்கொண்டு அவரைப் பார்ப்பீர்களோ அதை நான் அறியேன். நான் பார்த்த அளவில் கூறுகிறேன். திரு. கோபால் நாயுடு அவர்கள் பல துன்பங்களில் துவக்கத்திலீடுபட்டார்; உறுதியான மனமுடையவராயிருந்ததினால் சோதனை நாட்களில் விடா முயற்சியோடு ஆலையைத் தொடர்ந்து நடத்தினார். அவரது உறுதியும் விடாமுயற்சியும்தான் இந்த அறுபதாவதாண்டின் வைபவத்திற்குப் பெருமை தந்ததெனக் கூறுவேன். கோவை மாவட்டத்திலுள்ள 32 ஆலைகளிலும் இந்த ஆலையே மிகப் பெரிதெனக் கேட்டு மகிழ்ச்சிகொள்ளுகிறேன். தொழிலாளிகளுக்கு 70 ரூபாய்வரை ஊதியம் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். நாட்டின் உற்பத்திப் பெருக்கு தடைபடாமலியங்க தொழிலாளர்களிடத்தில் அன்பாகவும், ஆதரவாகவும் நிர்வாகிகள் நடப்பதைக்கண்டு பெருமைப்படுகிறேன்.

ஆலையில் வரும் லாபத்தில் 2½% மத்திய அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்கவேண்டியிருப்பதாலும், பங்குதார்களுக்கு 6¼% வட்டி கொடுக்கவேண்டியிருப்பதாலும், தேய்மானச் சிலவு பிறவற்றிற்கு செலவு செய்யவேண்டியிருப்பதாலும், தொழிலாளர்களுக்கு இனிமேல் அதிகச் சம்பளம் தர இயலாதபடி மத்திய அரசாங்கத்தின் வரிப்பளு ஆலை முதலாளிகளின் தலையில் வைக்கப்படுகிறது.

அறிஞர் திரு சண்முகம் அவர்கள் நிதி மந்திரியாக இருந்தது குறித்து பெருமைப்பட்டோம்; துரதிர்ஷ்டவசமாக அவர் பதவியைத் துறந்துவந்தது வருந்தத் தக்கதொன்றாகும். அவரைப்போன்ற திறமைசாலிகள் தற்காலம் நிதியிலாகாவில் யாருமில்லை.

இந்திய யூனியன் நிதி இலாகாவில் மந்திரியாக இருப்பவர் தொழிலாளர் நலனைக்குறித்து சட்ட அமைப்பை திருத்தி அமைத்து தொழிலாளியின் வாழ்க்கைத்தரம் உயருமாறு செய்வார்களென எதிர்பார்க்கிறேன்.

தொழிலாளிகளிடத்திலும், முதலாளிகளிடத்திலும் பரஸ்பரம் அன்பு பெருகுதல் வேண்டும். தொழிலாளி-முதலாளி இருவரின் ஒற்றுமையில் விளைந்த இவ்வறுபதாவது ஆண்டுவிழா போல இன்னும் பல அறுபதாண்டு விழாக்கள் இவ்வாலை காண வேண்டுமென்பதே என் ஆசை. உரிமையாளர் திரு. V. கோபால் நாயுடு, அன்பர் A. V. சீனிவாசலு நாயுடு அவர்கள்; நிர்வாகி G. கிருஷ்ணன் அவர்கள் நீடுவாழ்ந்து இவ்வாலையைப் பலப்படுத்த வேண்டுகிறேன். வணக்கம்.

குறிப்பு:- இவ் ஆலையின் நிர்வாகி திரு. G. கிருஷ்ணன் அவர்கள் தலைவருக்கு ஆங்கிலத்தில் நீண்டதோர் வரவேற்பிதழ் வாசித்தளித்து மலர் மாலை சூட்டி விழாவிற்குத் தலைமை தாங்குமாறு சென்னை மேயரை வேண்டினர்.

ஸ்தல ஆலை நிர்வாகிகளால் திரு. கோபால் நாயுடு அவர்களுக்கும்; ஸ்ரீனிவாசலு நாயுடு அவர்களுக்கும் விலை உயர்ந்த இரு பதக்கங்கள் முறையே வழங்கப்பட்டன.

திருவாளர்கள். A. V. சீனிவாசலு நாயுடு; R. V. லட்சுமையா நாயுடு; பத்மரூப ஐயர்; பாஷ்யம்; C. R. சதாசிவம்; G. புருஷோத்தமன்; துரைசாமி நாயுடு; C. P. ஹரியாச்சார் ஆகியோர்களுக்குத் தங்கச் சங்கிலிகள் நினைவாக வழங்கப்பட்டன.

ஆலைத் தொழிலாளிகளுக்கு ஆடையுடன், உணவும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டன.

திரு G. N. பாலசுப்ரமணியம் அவர்களால் இசை விருந்தும், திருமதி குமாரி கமலா அவர்களால் பரதநாட்டியக் கச்சேரியும், அகில இந்திய நாதஸ்வர வித்வான் திரு. T. N. ராஜரத்னம் பிள்ளை அவர்களால் நாதஸ்வரக் கச்சேரியும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கோவை மக்கள் இவ்வைபவத்தைக் கண்டுகளித்தனர்.

★

ஊதியமுள்ள பிரதிநிதித்துவத்திற்கும் அனுகூலமான குடும்ப பாதுகாப்பிற்கும்

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிட்.,

தலைமை ஆபீஸ்:- கோயமுத்தூர்.

தமிழ் நாட்டில் சென்ற 13 வருடங்களாக
திறமையுடன் சேவை செய்துவரும்
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

(o)

31-12-45 முடிய கணிதப்
பரிசோதனையில் போனஸ் பிரிவினை

ஜீவிய பாலிசுக்கு	:	ரூ. 40-0-0
எண்டௌமெண்டு பாலிசுக்கு	:	ரூ. 30-0-0

விபரங்களுக்கு தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

ஸ்ரீ T. A. ராமலிங்கம் செட்டியார்,
(அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்) தலைவர்.

M. S. பழனியப்ப முதலியார், B. A.,
மானேஜிங் டைரக்டர்.

C. R. சிவசுப்ரமணியம், B, A.,
செக்ரெடரி.

சட்டம் என்ன செய்யும்?

— தோழன்

ஏற்கனவே தேவதாசி ஒழிப்பு மசோதா ஒன்று சென்னை அரசாங்கத்தாரால் சட்டமாக்கப்பட்டு விபசாரத்தை தடுக்க முயன்றனர். இதன் விளைவாக, பகிரங்க விபசாரம் ஓரளவுக்கு நிறுத்தப்பட்டு, திருட்டுத்தனமான விபசாரம் நாட்டில் பெருத்தது. விபசாரம் விளைவதற்கு காரணம் பல படக் கூறலாம். அவற்றில் தலையாய காரணம் இரண்டாகும். ஒன்றுபொருந்தா திருமணம் மற்றொன்று, பொருளாதார பேதம் பொருந்தா திருமணமும், பொருளாதார பேதமும், நாட்டில் விபசார விடுதிகளைப் பெருக்கின. இவ்விரண்டும், மாறுதலடைய மக்களும், அரசாங்கமும் ஒன்றோடொன்று ஒத்துழைக்கவேண்டும். வாழ்க்கையில் வசதி குறைந்தவர்களும், சௌகரியக்காரர்களும் விபசாரிகளை விஸ்தரிக்க முற்படுகின்றனர். விபசாரத்தை தடைசெய்ய வேண்டும். அதற்கு ஒரு சட்டம் செய்யவேண்டும், என்பது நமது நீண்ட நாளைய கனவு. அதை இதுபோது சட்டம் செய்த இந்திய அரசியல் நிர்ணய சபையை, நெஞ்சார வணக்கம் செலுத்தி வாயார வாழ்த்துகிறோம். அதே சமயத்தில், தாலி கட்டிய புருஷனாக ஒருவனை ஒப்புக்குவைத்துக்கொண்டு பொருளுக்காக பல கணவன்மார்களை.

கூடி வாழ்க்கை நடத்தும் பல சகோதரிகளை நாம் இன்றும் காண்கிறோம். சட்டத்தின் சர்வாதிகாரத்தனத்திற்காக, பயந்து பகிரங்க விபசாரத்தை விடுவார்களே தவிர, திருட்டு விபசாரத்தை விடமாட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. வெளித்துளிரை கிள்ளிவிட்டால் பயிறு செழிக்காது என்பது நம்பமுடியாத செயல். உள் மூளையைக் கிள்ளி எறியவேண்டும். அப்பொழுதுதான் விபசாரம் வேரறுக்கப்படும். சமதர்ம சுபிட்ச ஆட்சியிலே, காதல் திருமணத்திற்கு இடம் கொடுக்கும் சமூகக் கட்டுக் கோப்பிலே, விபசாரம் வீழ்ந்து படும். இன்று தேவதாசி எனக் கருதப்படும், செங்குந்த மரபிலே, இந்தத் தொழில் பரம்பரை சீவிதமாக இதுநாள்வரை கையாளப்பட்டு இப்பொழுது பலரால் வெறுக்கப்பட்டுள்ளது. இத்தொழிலை ஜீவிதமாக கொண்டுள்ள செங்குந்த சகோதரிகள் சிலர், பொட்டையறுத்தெறிந்து, தாலிகட்டி ஓர் புருஷனுடன் நேர்மையாக கூடி வாழ விரும்புகிறோம். நெடுநாளாக ஊறிவந்த இந்தப் பழக்கம், உப்புக்கும் உதவாது என்றஉறுதி அவர்கள் மனதில் நன்றாகப் பதியவேண்டும். கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே சொல்வீச்சையும், செயல் வீச்சையும் அள்ளி எறிந்து இந்த தேவதாசி, (பொட்டுக்கட்டும் பொல்லாத வழக்கத்தை) பொசுக்க பாடுபட்டது, கோவை ஜில்லா செங்குந்தர் சங்கம்

அந்த வழக்கத்தை அறவே அழிக்கவும் செய்தது. சமூக மக்கள் தலை நிமிர்ந்து வாழ வழிகோலியது. மாறுதல் பெற்ற, தாய்மார்களின் வார்சுகள், இன்று மகத்தான வாழ்வு வாழ்கின்றனர். தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களில் அந்தந்த நாட்டின்

வழக்கத்திற்கேற்றாற்போல பலபட பேரிட்டு அழைக்கப்படும் சங்கங்கள் சமூக சேவை செய்ய முன் வர வேண்டும். நட்டுவனார் சங்கம் என்ற பெயராலோ, இசைவேளாளர் என்ற பெயராலோ, அண்ணாவிமார்கள் சங்கமென்ற பெயராலோ புலவர்கள் சங்கமென்ற பெயராலோ இருக்கும் செங்குந்த இனத்தைசேர்ந்தமக்களின் சங்கங்கள் ஓயாது ஒழியாது பாடுபட வேண்டும். அது போதுதான் மற்ற மாவட்டங்கள் நம் நிலையடையும். பாடுபட்டாலன்றி சட்டத்திற்கு ஒத்துழைத்தாலன்றி, இந்தப் பொட்டுகட்டும் வழக்கமும், தேவதாசிப் பழக்கமும் அதை நாகரிகம் என்று எண்ணும் கண்மூடிக் கொள்கையும், மண்மூடிப்போக மார்க்கமில்லை. அரசியல் சட்டம் என்ன செய்யும்? சட்டம் ஏட்டிலே வரிகளாக மின்னலாம். அதன் உதவிகொண்டு அதிகாரிகள், பையில் பணம் நிரம்பலாம். மக்கள் மனம் மாறுவதற்கு மகத்தான ஓர் சமூகப் புரட்சியை, ஆங்காங்குள்ள சமூகத் தலைவர்கள், பொதுநலத் தொண்டு செய்யின், இந்த கயமைத் தனம் அழிக்கப்படும். இல்லாவிடில் சட்டம் என்ன செய்யும்? சர்தாரே, என்ற பல்லவியை பாடத்தான் செய்வார்கள்.

★

★

நம்பிக்கை! நாணயம்! நீடித்த உழைப்பு!

உறுதியோடும் நாகரீக வேலைப்பாடும் அமைந்த பித்தளை பாத்திரங்களுக்கு தென்னாட்டிலே தலைசிறந்த இடம்

K. இராமச்சந்திரன்,

பாத்திரக் கடை,

பெரிய கடை வீதி. :: கோயமுத்தூர்.

வாய்ப்பு வேண்டும்!

(திருமதி. குஞ்சிதம்-குருசாமி பி. ஏ , எல். டி.,)

திருமதி. குஞ்சிதம் அம்மையார்

★

சாதாரண கிராமவாசி, வயலையும், வாய்க்காலையும், மாட்டையும், மாட்டுக் கொட்டிலையும் தவிர வேறு எதையுமே பார்த்தறியாதவர்தான். எப்படியோ மந்திரியாகிவிடுகிறார்! நிர்வாகத்தில் எவ்வளவு திறமையுடையவர் என்பதை வெகு சீக்கிரத்தில் மெய்ப்பித்துவிடுகிறார்! அவர் பெயரைச் சொல்லவே நடுங்குகிறார்கள்! அவ்வளவு கெடுபிடி! நாணயம்! பெருந்தன்மை! இது எப்படி நேர்கிறது? வாய்ப்பினால்தான். வாய்ப்புக் கிடைத்தால் எவரும் திறமைசாலியாகலாம். தகுதியுடையவராயிருக்கலாம். வாய்ப்பே தராமல் ஒருவரின் திறமையை எப்படிச் சோதிக்கமுடியும்?

வெள்ளையர் ஆட்சிபுரிந்தபோது, 'போர்ட்டர்' 'போலீஸ் கான்ஸ்டபிள்' வேலைகளைத் தவிர வேறு வேலை எதற்கும் நாம் தகுதியுடையவர்களல்ல என்றுதான் சொல்லிவந்தார்கள். நம்மில்கூட பலர் அப்படியே நினைத்திருந்தோம். ஆனால் வாய்ப்புக் கிடைத்தவுடன் எந்தத் துறையிலாவது நம்மை 'சோடைகள்' என்று கூறமுடிகிறதா? அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட 'வயலின்' சங்கீதம் முதல் 'ஹாக்கி' விளையாட்டுவரையில், எந்தத் துறையிலும் நாம் அவர்களுடன் போட்டி போட்டு வெற்றியும் பெறமுடியும் என்பதை நிரூபித்து வரவில்லையா?

அதுபோல பார்ப்பனர் தாம் எதற்கும் தகுதியுடையவர் என்ற தப்பெண்ணம் நம் நாட்டில் எப்படியோ பரவிவிட்டது. படிக்க வசதியேயில்லாத நம்மவர்களையும் பரம்பரையாய்ப் படித்துக்கொண்டுவரும் பார்ப்பனரையும் சரிசமமாகப் போட்டிபோடவிட்டால் நம் திறமையும், தகுதியும் எப்படி வெளிப்பட முடியும்?

ஒரு காலத்தில் வைத்தியத் துறையில் அவர்களைத்தவிர வேறு யாருமில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கவில்லையா? டாக்டர் லட்சுமணசாமி முதலியாரும், குருசாமி முதலியாரும், தம்பய்யாவும் அந்த நிலைமையை மாற்றிவிடவில்லையா? வக்கீல் தொழில் துறையில் எதிராஜுவும், சோமசுந்தரமும், ராஜமன்னாரும பிறரும் பார்ப்பனருடன் போட்டியிட்டு முன்னணிக்கு வரவில்லையா?

வாய்ப்பு ஏற்பட்டால் எவரும் திறமைசாலியாகலாம். தகுதியுடையவராகலாம்.

'சர்க்கசில் பெண்கள் கம்பி மீது சைக்கிள் விடுகிறார்கள்! 'ட்ரப்பீசியத்தில்' ஏறி பயங்கரமான 'பல்டி' வித்தைகளைச் செய்கிறார்கள். ஆண்களால் செய்யப்படும் அத்தனை உடற்பயிற்சி வேலைகளையும் செய்து காட்டுகிறார்கள்.

''என்ன இருந்தாலும் பொம்புளை தானே! அவளுக்கு என்ன தெரியும்'' என்பவர்களும், ''பெண்களுக்கு அடுப்பங்கரை வேலையும், குழந்தை வளர்ப்பும், கும்மியும், கோலாட்டமும் கற்றுக்கொடுப்பதே அவசியம்'' என்று கூறும் கல்வி நிபுணர்களும் ரஷ்யப் பெண்களைப் பற்றிப் படித்திராவிட்டாலும் சர்க்கஸ் பெண்களையாவது பார்த்திருக்கக் கூடாதா?

மலையாளப் பகுதியிலிருந்து சமையல் வேலைக்கு ஆள் வேண்டுமானால் பெண்கள் கிடைப்பதில்லை. ஆண்கள்தான் கிடைக்கிறார்கள். ஏன்? அப்படியானால் அங்குமட்டும் மாணவர்களுக்கு அடுப்பங்கரை வேலை கற்றுக்கொடுக்க வேண்டுமா? கல்வி நிபுணர்களைத்தான் கேட்கிறேன்.

வாய்ப்பு ஏற்படாவிட்டால் இன்றைக்கு ஹைகோர்ட் ஜட்ஜ்களாகவும், பிரபல டாக்டர்களாகவும், சிறந்த என்ஜினியர்களாகவும் உள்ளவர்களில் பலபேர் கோவில் மடப்பள்ளிக்குள் புளியோதரை செய்துகொண்டும், அக்குளில் பஞ்சாங்க தர்ப்பைக்கட்டுவைத்து வீடு விடாய் அலைந்துகொண்டும்தானே இருப்பார்கள்?

வாசகர்களே! நன்றாக யோசித்துப் பாருங்கள்! வாய்ப்பு வேண்டும் என்று வம்பு செய்யுங்கள்.

★ நன்றி ★

கலைவாணர் N. S. கிருஷ்ணனிடமிருந்தும், M. D B. V. S. சபாவின் உரிமையாளர் நவாப் T. S. ராஜமாணிக்கம் அவர்களிடமிருந்தும், M. S. B. S. சபாவின் உரிமையாளர்களான டி. கே. எஸ். சகோதரர்களிடமிருந்தும், கிருஷ்ணன் நாடக சபாவின் உரிமையாளர் K. R. இராமசாமியிடமிருந்தும் மற்றும் பல நண்பர்களிடமிருந்தும் நமக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் கிடைத்தன. இதன்மூலம் அவர்கட்கு நமது ஆழ்ந்த நன்றிகள்.

வரப்பெற்றோம்:— *(காலண்டர்கள்)*

ஜூபிடர் பிக்சர்ஸ், சென்னை.
கதிரேசன் அச்சகம், கோவை.
வேளாள அச்சுக்கூடம், கோவை.
கே. ஆர். & சன்ஸ், கோவை.
T. கோவிந்தராஜுலு நாயுடு, ஜுவல்லர்ஸ்,
போஸ் ரோடு, சென்னை.

தென்னாட்டு கோல்டுவின்கள்

M. சோமசுந்தரம்

தென்னாட்டு கோல்டுவின்களான திரு. M. சோமசுந்தரமவர்களையும், ஜனாப் S. K. மொய்தீனவர்களையும் அஞ்சாது கூறலாம். ஏன்?

படத் தொழிலில் புதியதோர் விறுவிறுப்பையும் பரபரப்பையும் தமிழ்நாட்டிலே விஞ்ஞான ரீதியிலே தந்தவர்களிவ்விருவரே.

முதன் முதலாக இவர்கள் பிடித்த "கண்ணகி"ப்படத்தில் சிறந்த கலை நுணுக்கத்தையும் (Techinique) நல்ல தமிழையும், தேர்ச்சிபெற்ற நடிப்பையும் காணலாம். பின் பிடித்த படங்களில் ஒவ்வொரு சிறந்த நூதன அம்சத்தையும் காணலாம்.

வெர்ஜீனியா மேயோ, தினா தர்பின் போன்ற நடிகைகளைத் தனது படத்தால் சாமுவேல் கோல்டுவின் ரசிகப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது போல பெரும்பகுதியான புதுமுகங்களைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தியவர் இவ்விருவர்களே யாவர்.

உண்மையாக தமிழுக்கும், கலைத் தேர்ச்சிக்கும் ஒரு நல்ல இடம் திரைவானிலிருக்கிறதென்றால் அது ஜூபிடர் பிக்சர்சாரைத்தான் சேரும்.

ஆதியில் சமூகப் படங்களைத் தயாரித்த பெருமை இந்த பிக்சர்சாரையே சாரும். திரு. M. சோமசுந்தரமவர்களை சோமு என்றால் தான் எவரும் அறிவார். அதேபோல் மொய்தீன் அவர்களை S. K. என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

சோமு அவர்கள் நடிகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தன் வயப்படுத்துவதில் மிக்க சமர்த்தர். S. K. அவர்களோ விளம்பரப் பணியிலும், வெளியீட்டு விஷயங்களிலும் அதிக பயிற்சி பெற்றவர். படத் தொழிலுக்கு இவ்விரண்டும் உடலும் உயிரும் போன்றதாகும். சோமு அவர்களும் S. K. அவர்களும் கூடிச் செய்த பணியில் விளைந்த வெற்றியே இன்று ஜூபிடரின் அதி உன்னத வாழ்விற்குக் காரணமாகும்.

ஜூபிடரின் பொது நிர்வாகியான T. S. வெங்கடசாமியின் ஒத்

துழைப்பையும் இங்கு குறிக்கற்பாலதே.

திரு. வெங்கடசாமி இளைஞர். ஆயினும் மிகத் திறமையுடையவர். நிர்வாகத் தொழிலில் சலியாது உழைக்கும் உறுதியான மனம் பெற்றவர். களைப்போ சலிப்போ இன்றி தன் கடமையை செவ்வனே செய்யும் சித்தம் பெற்றவர்.

ஜனங்களிடத்தில் மிக்க விஸ்வாசமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளும் நல்ல குணம் படைத்தவர். புதிதாக வரும் நடிக நடிகைகளிடத்தில் சௌஜன்யமாகப் பழகும் பண்புடையவர். ஜுபிடர் பிக்சர்ஸ்

ஜனாப் S. K. மொய்தீன்

வெற்றியின் காரணத்திற்கு இவரும் ஒருவரெனக் கூறலாம்.

வாழ்க கலைஞர்!

வளர்க திரைக்கலை!!

T. S. வெங்கிடசாமி

★

தேவை

தேவை, தேவை என்று எந்த மனிதன் முழங்குகின்றானோ அல்லது எந்த இனம் கூறுகின்றதோ அந்த மனிதனோ அல்லது அந்த இனமோ நிச்சயம் முன்னேறும்.

— ஆஸ்கார் ஒயில்டு

படிப்பும் பயனும்

(எஸ். கே. சாமி)

எஸ். கே. சாமி.

❖

வாழப் பிறந்த மனித குலம், வாழ்வுக்கு வகை தேடவேண்டுமானால் முதலாவது உரிமை, உறவு என்பவற்றின் உண்மைப்பொருளை நன்றாக உணர்ந்துகொள்ளல் வேண்டும்; உணர்ந்துகொண்டால் மட்டும் போதாது; அதன்படி நடக்கவேண்டும். இதற்கு மனித குலத்திற்குக் கல்வி மிகத் தேவை. இந்தக் கல்வி வெறும் ஏட்டுக் கல்வியன்று, படித்ததை, பார்த்ததை, கேட்டதை பகுத்தறிவோடு சிந்திக்கும்போது உணர்தல் என்ற தன்மை ஏற்படுகிறது. அப்போதுதான் கற்ற கல்வி வாழ்க்கையோடு இணைகிறது. வாழ்க்கையோடு இணைக்கப்படாத ஏட்டுப் படிப்பின் பயன் நன்மைக்குப்பதில் தீமைக்கு வித்தாக அமைகிறது.

வீணான வாதங்களையும், வம்புகளையும் எழுப்பி உலகைக் கெடுக்கும் வகையில் கல்வி—அதுதான் ஆராயப்படாத கல்வி—சிந்தித்தறியாத கல்வி—ஏட்டுப்படிப்பு இழுத்திழுத்துச் செல்கிறது. இப்படிப்பட்ட படிப்பைவிடப் படியாமலிருப்பதே மேல் என்ற நிலை ஏற்படுகிறது இவர்கள் கற்றும் கல்லாதவர்களாகிறார்கள். காரணம் வாழ்க்கைக்கு வகை தேடாததால்—உணர்ந்து அறிவு அமைந்தவனாகயிருப்பவனே உண்மையான கல்விமான் என்று தெரிதல் வேண்டும்.

தெரியாதவனைத் திருத்தமுடியும்; தெரிந்தவன்போல நடிப்பவனை அல்லது மமதை கொள்பவனைத் திருத்த முடியாது என்பது மட்டுமல்ல; தீமை செய்தவனாகவும் ஆகிறான். இது வருந்தத்தக்கதல்லவா? இவனை உலகம் நாளடைவில் வெறுத்துத் தள்ளும், வழி வந்தோர் வயிறெறிந்து தூற்றுவர் என்பது சரித்திர—அனுபவ உண்மை. கவி பாரதியார் இம்மாதிரி மனம் கலங்கிப் பாடியிருக்கிறார், தமது பாஞ்சாலி சபதம் என்ற காப்பியத்தில்,

பாண்டவரைப் பண்பட்டவர்களாக எண்ணப்பட்டுக் கவி பாடியது பாரதம். அதை ஆதாரமாக வைத்து, தனது கற்பனையில் எழுதப்பட்டது பாஞ்சாலி சபதம். பாண்டவர் சூதாட்டம் கதாரம்பம். எல்லாவற்றையும் வைத்து சூதில் இழந்துவிட்டான். இறுதியாக நாட்டையும் வைத்து இழந்துவிட்டான். இதனைப் பாடுகிற கவிஞனுக்கு இச்செயல் தீராத துயரை உண்டாக்குகிறது. “ஆகா கற்றவனா இக்குற்றம் செய்தான்” என்று எண்ணுகின்றான் கவிஞன், கலங்குகிறான், கடுங்

கோபம் கொள்கிறன். நாட்டை வைத்து சூதாட அவனுக்கு என்ன உரிமை என்ற ஆத்திரம். படித்துணர்ந்த பண்டிதனை பாண்டவரின் மூத்தவனு இப்பழி செய்தான் என்று பதைக்கின்றான் பாரதி. உரிமையையுணர்ந்த உணர்ச்சி வேகத்தால் உந்தப்பட்டு கவிதை வெளிவருகிறது, காட்டு வெள்ளம்போல்.

கோயிற் பூசை செய்வோர்—
சிலையை
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்—
வீட்டை
வைத்து இடித்தல் போலும்
ஆயிரங்களான நீதி
அவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்

இவ்விடத்தில் "உணர்ந்த" சொல்லின் அழுத்தம், கவனிக்கப்படல் வேண்டும். படித்தால் மட்டும் போதாது. படித்தவற்றையுணர்ந்து நடத்தல் வேண்டும். அதுதான் உண்மையான படிப்பு. அதனல் தான் பயனுண்டு. வள்ளுவர் இதை,

"ஓதியுணர்ந்துங் பிறர்க்
குணர்த்தும் தானடங்காப்
பேதையில் பேதையாரில்"

என்கிறர் தமது பொது மறையில்.

பெங்களூர் பிரியாணி ஓட்டல்

(டவர் கிளாக்குக்கு எதிரில்)

கோயமுத்தூர்.

கோவையிலே ஈடுயெடுப்பற்ற பிரியாணி ஹோட்டல் இது ஒன்றே.

ஆரம்ப நாளிலிருந்து இந்நாள்வரை அப்பழுக்கின்றி சுகாதார முறையோடு சுவை குன்ருத வகையோடு தயாரிக்கும் உணவு வகைகளுக்கு ஒப்பற்ற விடுதி இது ஒன்றேதான்.

Pro:- K. S. M. G. சாமி,
ராஜ வீதி, கோவை.

Telegrams: PROTECTION.

உங்கள் அனைவருக்கும்

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

தி பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்.

மானேஜிங் டைரக்டர்:

ஸ்ரீ P. S. கெங்கா நாயுடு.

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து ஆகிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் உண்டு.

திறமைவாய்ந்த ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் இன்ஸ்பெக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் அலவன்சும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு உடனே தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

ஜுபிடரின் வேலைக்காரியில்

திரு. T. S. பாலையா

நல்ல

N. S. கிருஷ்ணன்



சகஸ்ரநாமம்

தம்பி

என்ன வழி?

— புலவர். மா. நன்னன்.

இன்று உலகிலே எங்கு நோக்கினும் வஞ்சனை சூது பொறாமை கொலை களவு குத்து வெட்டு சூறை தீ என்ற இன்னல்களே சூழ்ந்து வெறியாட்டம் ஆடிவருகின்றன. வர வர அவ்வெறியாட்டம் மிக்கு வருகின்றதே ஒழிய குறைந்தபாடில்லை. குறையும் அறிகுறியும் காணப்படவில்லை. ஒவ்வொரு நாடும் உலகத்தையே தன்கீழ் வைத்து அடக்கி ஆளவேண்டும் என்று கருதுகின்றது. ஒருமதம் மற்றொரு மதத்தை ஓங்க விடுவதில்லை. ஒரு இனம் மற்றொரு இனத்தை ஒழிக்க முனைந்து கொண்டிருப்பது ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்தை குட்டிச்சுவராக்கிக் கொண்டு வருவது. ஒரு தனி மகன் மற்ற மக்களை எல்லாம் அடக்கி ஒடுக்கி அழித்துக் கொண்டிருப்பது இத்தகைய எண்ணங்கள் அறிவும் நாகரிகமும் பெருகப் பெருகத் தானும் பெருகிக் கொண்டே வருவதே காண்கின்றோம். முதல் உலக போருக்கான சூழ் நிலையில் இவ்வெண்ணங்கள் எவ்வளவு இருந்தனவோ அதைவிடப் பன் மடங்கு இரண்டாம் உலகப்போரக்கின் அடிப்படையாய் அமைந்தன. இரண்டாம் உலகப்போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆயின. இன்றைய சூழ் நிலையில் நாடு பிடிக்கும் அவ்வெறிக்குணம் அளவிறந்து காணப்படுகின்றது. அதன் அறிகுறியே இந்துஸ்தான், பாகிஸ்தான் தகராறும், ஆந்திரஸ்தானுக்குள்ளாகவே திராவிடநாடு ஐதரபாது போன்ற பிரச்னைகளும் பாகிஸ்தானுக்குள்ளாகவே பட்டாணிஸ்தான் காஷ்மீர் போன்ற சிக்கல்களும் வளருதல் ஆகும். இவைஒரு புறமிருக்க உலக முழுவதையுமே உள்ளத்தில், நிறுத்திப்பார்த்தால் என்ன காண்கிறோம்? யூதரும் அராபியரும் மோதிக் கொண்டு பாலஸ்தீனப் படுகளமாக்கும் காட்சியையும், தொழிலாளர் இயக்கமும் பொருளாளர் ஆட்சியும் புகைக்கும் புகைச்சலால் சிதைந்து கெட்டு சீரழியும் வல்லரசுகளின் பிடியிலே சிக்கி, வதையும் ஜெர்மனியையும், மலேயா பர்மா மற்றும் உலகெங்குமே பொதுவுடைமை பூசலாலும் பிறவேறு பிணக்குகளாலும் உருக்குலைந்து வரும் உலகத்தையும் தான் காணமுடிகிறதே தவிர அமைதியான உலகை "யாதும் ஊரே யாவருங் கேளீர்" என்ற சீர்மை செழித்தோங்கும் உலகை, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உயரிய பண்பு களிநடம் புரியும் உலகை காணமுடிகின்றதா இல்லையே ஏன்? இனியாவது என்றேனும் ஓர் நாள் அத்தகைய பொன்னுலகைக் காண்போம் என்ற நம்பிக்கையோ அறிகுறியோ காணமுடிகின்றதா முடியவில்லையே; ஏன்? தனிப்பட்ட வாழ்வில்கூட ஒருவன் மற்றொருவனோடு மனமொத்து, அஞ்சாது, அறுவருக்காது, அமைதியாக, வாழ இயலுகின்றதா? இயலுவதில்லையே ஏன்? மக்கள் பிறப்பெடுத்த ஒவ்வோர் உயிருடலும் தன் முழுத்திறனையும் செலுத்தி ஆழ்ந்து கருதப்படவேண்டிய ஓர் ஒப்பற்ற, உயர்ந்த, இதனினும் இன்றியமையாப் பிரச்னை வேறில்லா பிரச்னை இதுவேயாகும்.

மேற் கூறிய இன்னல்களினின்றும் மக்களை நன்னெறியில் செலுத்தத்தான் மதமும் கடவுளும் உண்

டாக்கப்பட்டன. மதத்தின் சார்பில் நரகத்தை காட்டி வஞ்சனையாளனை, சூதுக்காரனை, ஏமாற்றும் எத்தனை, கொலைகாரக் கொடியோனை அச்சுறுத்தப்பட்டது தீமையைச் செய்தால் தீ நரகில் வீழ்ந்து கொதிக்கும் எண்ணெயாலும், சீறும் செந்நாகத்தாலும் துடிக்கும் கருந்தேளாலும், இருப்புலக்கையாலும், அறைக்கும் செக்காலும் அவதியுற வேண்டும். அவ்வவதிக்கு சல்லாமல் மீளமுடியாது என்ற கோட்பாட்டுக்கு மதிப்பளித்துமக்களைத் தீங்கு செய்யாது காக்க முடிந்திருக்கலாம். மோட்சத்தைக் காட்டி அறம்புரியும்படி, ஆக்கம் தேடும்படி ஒழுக்கம் உடையராகும்படி மக்களை ஊக்கி வந்தனர் முன்னோர். நல்லறம் செய்தால் நல்லுலகை அடையலாம் அவ்வுலகில் பகலிரவென்பதில்லை, பாலும் தெளிதேனும் பாகும் பழமும் எலாம் பாய்ந்தோடும், ஆனல் அங்கு பசி என்பதே யிருக்காது. அப்பொன்னுலகில் ரம்பை ஆட, ஊர்வசி பாட, திலோத்தமை பக்கத்தில் நின்று பணிபுரிய வீற்றிருக்கலாம் என்றும் அங்கு சென்றோர் அனைவரும் வெறுப்பு விருப்பற்று காமகுரோதாதிகளை களைந்தும் மலம் அடக்கிய முனிபுங்கவராகத் திகழ்வர், அங்குள்ளவர்களுக்குத் தேவையான வேறு பொருள் இருக்காது. என்றாலும் கருதியதெல்லாம் கொடுக்க வல்ல காமதேனுவும், கற்பகமரமும் அங்கு தான் உண்டு. சாகாவரம் பெற்றவர்கள்தான் அங்குள்ளவர் அனைவரும். என்றாலும் சாவாமருந்தாய தேவாமிர்தம் அங்கு உண்டு. அங்கு சென்றுவிட்டால் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு கால்கள் தரையில் படாமல் செல்லலாம். எனினும் அங்குள்ளவர்கட்கெல்லாம் ரொட்டியோ எண்ணெயோ தேவைப்படாது. பறந்து சென்றிறங்கும் புட்பக விமானமும் அங்கு தான் உண்டு என்றவாறு ஆசையைக் காட்டி மக்களை நல்வழிப் படுத்த முயன்றனர் பண்டையோர்.

ஆனல் அத்திட்டம் இக்காலத்திற்கு செல்லத் தகாததாகிவிட்டது. இன்று நரகத்திற்கு அஞ்சி பாபம் செய்யாதவனையோ, மோட்சத்தை விரும்பி அறம் செய்பவனையோ எங்கும் எவராலும் காணமுடியாது, உறுதியாகக் கூறமுடியும். சாதாரண மக்கள் கூட அக்கோட்பாடுகளுக்குச் சிறிதும் மதிப்பு கொடுப்பதில்லை. கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய வேடிக்கையாக்கப்பட்டது அக்கொள்கை. வேண்டுமானல் அக்கொள்கையை கருவியாக்கி பிறரை வஞ்சித்துப் பிழைக்க ஒரு சிலருல் முடிகிறதே ஒழிய, பிறர்க்கு நலம் செய்யப்பயன் படுவதில்லை. வஞ்சனையை ஒழிக்கத் தோன்றியதாகக் கூறப்படும் அத்திட்டம் வஞ்சனைக்கே ஒரு சிறந்த கருவியாக்கப் பட்டுவிட்டது.

மதக்கோட்பாட்டைப் போலவே அரசனும், அரசியலும், சட்டமும், ஆட்சியும் மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. சிறைச்சாலையும் கொலைக்களமும் மக்களுக்கு தீமையின் தீதை விளக்கி அச்சுறுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. பட்டமும் பதவியும், சட்டமும் சன்மானமும் நன்மையின் நலத்தையும் பாதுகாப்பின் பயனையும் மக்களுக்குக்கற்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவைகளே. ஆனல் இன்றைய நிலையில் இத்திட்டமும் உதவாக்கரையாக்கப்பட்டது செந்தலைப்பாகையை கண்டு சிதறி ஓடிய மக்கள் அதனைக்கண்டு சிரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. "மாங்குயில் கூவை" என்ற பண்பாடு வளர்ந்தோங்கி வருகிறது. சட்டமோ தீமை புரிவதற்கு அப்பழுக்கற்ற குறுக்கு வழிகளையெல்லாம் வஞ்சகர்க்கு கற்பிக்கும் துணையாகி விட்டது. ஆட்சி பீடமேறியுள்ள ஆளவந்தார்களோ, ஏமாற்றுக்காரனின் ஏவலராகி விட்டனர். காரணம்

என்னவெனில் சட்டத்தையும் அதிகாரத்தையும் சாரமற்றதாக்கி முறியடிக்கும் திறனுள்ள பல சக்திகளை அச்சட்டமும் அதிகாரமுமே நாட்டில் உண்டாக்கி விட்டன. ஆகவே இத்திட்டத்தாலும் மக்கள் தீதின் விலகி நன்மையடைய, நல்வாழ்வு வாழ வழியில்லை. எனவே சட்டமும் அதிகாரமும் திருத்தப்பட்டோ அல்லது அழித்துப் புதிதாக உண்டாக்கப்பட்டோ ஆகவேண்டும். அப்பொழுது அச் சட்டத்தையும் அதிகாரத்தையும் மிஞ்சும் சக்தி வேறெதுவும் உலகத்தில் இல்லாதவாறு அவை ஈடெடுப்பற்ற ஆற்றலுடன் அமைக்கப்பட வேண்டும். அங்ஙனம் அவை அமைந்தாற்றான், லஞ்சத்தளையை அறுக்கவும், சூழ்ச்சிச் சுவரை இடிக்கவும் அவைகளால் முடியும்.

அதுபோன்றே, இப்போது இருக்கும் கடவுள்களையும், அவை பற்றின கோட்பாடுகளையும் முதலில் அழித்தொழிக்க வேண்டும், பிறகு புதிதாக ஓர் கடவுளைப் படைக்க வேண்டும். அப்படி புதிதாகப் படைக்கப்படும் அக்கடவுள் எல்லா இடங்களிலும், எல்லா காலத்திலும் எல்லோருலும் விரும்பக்கூடியதாக, எல்லா ஆற்றல்களும் பெற்றிருக்க வேண்டும், அல்லது எல்லோருக்கும் எவ்வித வேறுபாடும் கருதாது, எல்லா இடுக்கண்களையும் களைந்து எல்லா இன்பங்களையும் அளிக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும். இலையெனில் நாம் எவ்வாறெல்லாம் வருங்காலம் அமைய வேண்டுமென்று மனக்கோட்டை கட்டுகின்ரேமோ அம்மனக்கோட்டையை புறத்தே அமைத்துத்தரும் சான்ருண்மையும் ஆற்றலும் பெற்றதாக அக்கடவுள் அமைய வேண்டும் ஆனல் அத்தகைய கடவுள் ஒன்று இல்லையே என்ற வருத்தந்தான் நம்மை வருத்துகின்றது. இதுவரை இங்கும், என்றும், எவருலும் அல்லது உண்டாக்கப்படவில்லை. இனி உண்டாக்கவும் முடியாது என்று நாம் உறுதியாக நம்புவதால் அவ் வருத்தம் மேன் மேலும் பெருகுகின்றது. வழியிருந்தால் சொல்லுங்கள் செய்யுங்கள். மக்களின் தேவைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டால், மேற் கூறிய நிலைமைகள் உண்டாக இடமிருக்காது என்று சிலர் கூறலாம். இக்கூற்று ஓரளவு பொருந்துமே ஒழிய முற்றிலும் பொருந்தாது. ஐந்து ரூபாய் ஊதியம் பெறுகிறவனும் பலவற்றை விரும்பி கிடைக்காமல் போகவே கொடுமை புரிந்தோனும் தன் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிருன் எனவே, மக்கள் அனைவரின் தேவைகளை நிறைவு செய்துவிடுவதினலேயே ஒழுங்கு நிலவும் என்று கூறுவது ஆகாத்திட்டமாகும். வானத்தை எட்டித் தொட முயன்று மேலே போக போக அவ் வானமும் மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போவது போல மக்களின் தேவைகளும் நிறைவடைய மேலும் மேலும் பெருகிக் கொண்டேயிருக்கும் மக்களின் தேவைகளனைத்தும் ஒரு நாளும் நிறைவடைய போவதுமில்லை, அதனல் உலகம் அமைதியை காணப்போவதுமில்லை. அங்ஙனமாயின் உலகம் உருப்பட வேறு'என்ன வழி?' அதுதான் நாடெங்குமுள்ள நல்லவர்கள் கேட்கும் கேள்வி. அதனையே யானும் உங்களை கேட்கிறேன்; உலகு உருப்பட என்ன வழி.

மனேபாவம்.

ஒரு மனிதனுடைய மனேபாவ விருத்திக்கு அவனது மனச்சாட்சியே காரணம்.

— பிரான்ஸ் கிராசிட்.

குமரன் மில்ஸ்

லிமிடெட்,

புதுப்பாளையம்-மேட்டுப்பாளையம் ரோடு,

கோயமுத்தூர்.

★

நாங்கள் 36, 60, 80 நெம்பர் பாவு நூல் தயாரிக்கிறோம்!

இந்திய மூலதனம்-நல்ல டிவிடெண்ட், கல்வி, தொழில் அனுபவம் நிறைந்த நிர்வாகம்

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் :

N. அப்புசாமி நாயுடு & Co.,

டைரக்டர் :

G. V. முத்துசாமி B. Sc.

புயல்காற்று

ரேஷன் தொல்லை ஒழியுமா?

(புயல்)

உணவுப் பங்கீடு முறை ஒழிந்தது கண்டு பூரித்தோம்! மீண்டும் இந்த பங்கீடுமுறை அமுலுக்கு வருவதைக் கண்டு வருந்துகிறோம். அட்வைசரி ஆட்சியில் எழுந்த இந்தப் பங்கீடு முறை தலைவர் காந்திஜியின் யோசனைப்படி சென்னை சர்க்கார் வேண்டாம் இம்முறை யெனத்தள்ளிற்று. நாட்டில் ஏழை மக்கள் உழுதுண்ணும் குடியானவர்கள் உணவுப் பங்கீடை வெறுத்தனர். பங்கீடு வசதியுள்ளோர்களுக்கு சாதகமாகவும் அல்லாதாருக்குப் பாதகமாகவுமிருப்பது கண் கூடு. அன்றாடம் கூலி வாங்கி வயறு வளர்க்கும் கூட்டத்தார் இந்தப் பங்கீடு முறையால் பாதிக்கப்படுகின்றனர். மாலை கூலியுடன் வீடு சென்ற ஏழை மகன் அவ்வூதியத்தைக்கொண்டு உணவுப் பொருள் வாங்க அருகதை அற்றவனாகிறான். இந்தப் பங்கீடுமுறை வாரமொரு முறை வினியோகிக்கப்படுவதால் அவஸ்தைக்கு ஆளாக வேண்டிய அவசியமேற்படுகிறது. பெரியநிலச்சுவான்தார்கள் உணவுப் பொருளை பதுக்கி கருஞ்சந்தை வளர்ப்பதற்கு இந்தப்பங்கீடுமுறை பெருந்துணை செய்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. சந்தைக்கு சென்று சில்லரை வியாபாரம் செய்து பண்டமாற்றம் செய்யும் உழுவர்களின் கதி இரங்கத்தக்க நிலையில் இருக்கிறதென்பதை எவருமறிவர். அழுத பிள்ளையின் கையில் கனியைக் கொடுத்து அழுகை நின்றவுடன் தட்டிப பறித்துத் தான் தின்று மகிழ்வதுபோல வேண்டாமென இடைக்காலத்தில் சிறிது நாள் ஒதுக்கிவைத்து மீண்டும் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதின் அர்த்தமென்ன?

எடுத்துக்காட்டாக சூலூர் பங்கீடு முறையை எடுத்துக்கொள்வோம். எல்லாவூர்களிலும் பங்கீடு முறை விநியோகிக்கப்படுவது ஓர் முறை என்றால் சூலூருக்கு தனிமுறை ஒன்றுண்டுபோலும்! சூலூர் பஞ்சாயத்து போர்டு எல்லைக்குட்பட்ட ஓர் கிராமம். சுமார் 7000 மக்கள் கொண்டதாகும்.

சூலூரைப்போன்ற ஏனைய ஊர்களிலெல்லாம் எல்லா மக்களுக்கும் ஒரேவிதமாகத்தான் உணவுப் பங்கீடு வினியோகிக்கப்படுகிறது. ஆனால் சூலூரில் உள்ள முக்கியஸ்தர்கள் இம் மாகாணத்தில் வேறெங்கும் காணமுடியாதபடியான ஓர் விசித்திரமான—விநோதமான—விபரீதமான நவீன திட்டமொன்றை

சிருஷ்டித்திருப்பதாகக் கேள்விப் பட்டோம்.

மனுவகுத்த ஜாதி நான்கென்றால் மார்க்ஸ் வகுத்த ஜாதி, (ஏழை, முதலாளி) இரண்டென்றால்; சூலூர் பிரமுகர்கள் வகுத்த ஜாதி மூன்றாகும். அவை வருமாறு:-

1. உயர்ந்த ஜாதி
2. மத்திய வகுப்பார்
3. தாழ்த்தப்பட்டோர்

உயர்ந்த வகுப்பாருக்கு 100% அரிசியாக வழங்குவதென்றும், மத்திய வகுப்பாருக்கு 50% அரிசியும், 50/- இதர தானியங்கள் தருவதென்றும்; தாழ்த்தப்பட்டோர்களுக்கு 100/- தானியங்கள் கொடுப்பதென்றும் முடிவு செய்துள்ளார்கள்.

காரணம்:- சென்ற உணவுப் பங்கிடுமுறை காலத்தில் 100 அல்லது 200 நபர்களுக்கு முழுக்கத் தான்ய சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. அவர்களும் பாதி அரிசியும், பாதி இதர தான்யங்களும் வாங்கவேண்டுமென்றமுறைக்காக ஊரிலுள்ள உயர்ந்த ஜாதி நீங்கலான ஏனைய 6500 மக்களும் அவதிக்காளாக வேண்டுவதற்காக திட்டம் செய்துள்ளனர். உணவுப் பங்கிடு முறையிருந்த சென்ற காலத்தில் ஒழிந்து போன உதவாக்கரை உணவுக் குழுவின் உறுப்பினர்கள் செய்த தொல்லை கொஞ்சமல்ல. வேண்டியவர்களுக்கு ஒருமுறைக்குப் பன்முறை துணி வாங்க உதவினார்கள். ஊரிலே உணவுப் பொருள்கள் கருஞ்சந்தையிலே விற்பதற்குத் துணையாயிருந்தார்கள். சில கிராமங்களில் புருப் கமிட்டியார் மக்களுக்காக மானத்தைக் காப்பாற்ற விநியோகித்த ஆடைகளை ஏலத்திலே விற்று லாபத் தொகையை கடவுளுக்கு செய்வதாகப் பிரசாரம் செய்து தங்கள் நிலையை உயர்த்திக் கொண்டார்கள். இந்தத் தொல்லையெல்லாம் நீங்கிற்று பங்கீடுமுறை இல்லாததால் என மனச்சாந்தியுடனிருந்தோம். மீண்டும் தொல்லை வந்ததே என வருந்துகிறோம். பஞ்சாயத்து போர்டைக் கைப்பற்ற தங்களுக்கு சாதகமாக உள்ளவர்களுக்கு உதவி செய்வதாக பாசாங்குசெய்து ஊரை ஏமாற்ற உணவுக் கமிட்டியில் சில உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் தங்களைத் திருத்திக்கொண்டு ஏழை மக்களைப் புறக்கணிக்காதிருக்க விழைகிறோம். வேறு சிலர் விதவைகளுக்கு வெள்ளைப் புடவை வாங்கித் தருவதாகக் கூறி விபரீதமாக நடக்கும் வேதாந்திகளின் நிலையை நன்குணர்வோம்.

அண்மையிலே பஞ்சாயத்து போர்டு தேர்தல் வரப்போகிறது. வாசகர்கள் தொடர்ந்து புயலை படிக்கும்படி வேண்டுகிறோம்.

தன்னுயிர் தானறப்
பெற்றானை ஏனைய
மன்னுயிரெல்லாம் தொழும்
— குறள்

எங்களிடம் கும்பகோணம் வெள்ளியப் பாத்திரம், எவர் சில்வர், பித்தளை, தாம்பிரம், வெங்கலம், அல்மோனியம், இரும்பு சாமான்கள் கிடைக்கும்.

K. ராமலிங்கம் செட்டியார்,
பாத்திரக்கடை,
235, ராஜ வீதி, கோயமுத்தூர்.

படக் கலைப் பகுதி

வேலைக்காரி

விமர்சனம்.

—(தோழன்)—

கதை வசனம் :

அறிஞர் அண்ணாத்துரை M. A.,

பாடல் :

நாராயண கவி

டைரக்ஷன் :

A. S. A. சாமி B. A., (Hons.)

தயாரிப்பு :

ஜூபிடர் பிக்சர்ஸ்

சென்ட்ரல் ஸ்டுடியோஸ்,

கோவை.

வேலைக்காரியை அறிமுகப் படுத்தி வைத்தார் A. S. A. சாமி அவர்கள். வேலைக்காரியைக் கண்டோம். வேலைக்காரி புரட்சிக் கருத்துக்களை வீசியெறிந்து சாய்ந்து போன சமூகக் கொள்கைகளை தரைமட்டமாக்க முயல்கிருள். வேண்டாத ஜாதிபேதத்தை வெட்டி வீழ்த்துகிருள். பழைய குலாசாரங்களை பலியிடுகிருள். அட்டூழியப் பணத்திமிரை அழிக்கிருள்......... சுருங்கச் சொன்னல் வேலைக்காரி சமூகம் சீர்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் வேலை செய்யப் பிறந்த வேலைக்காரி என்றுதான் படம் பார்க்கும் ஒவ்வொரு ரசிகரின் முடிவாக இருக்கும். அறிமுக வேண்டாத அறிஞர் அண்ணாத்துரை அவர்களின் கருத்தோட்டத்திற்கும்; சொல்லோவியத்திற்கும் மதிப்பீடு போடவேண்டிய அவசியமில்லை; ஏன்? அண்ணா அவர்கள் அறிஞர். அறிஞர் விரல் விடுத்த எழுத்துச் சரங்கள் எதுவும் தரத்தில் தாழ்ந்திருந்ததில்லை, இருக்கப்போவதுமில்லை. இது உறுதி. அது நிற்க.

தென்னாட்டுப் பெர்னாட்ஷா அண்ணா அவர்களின் அரிய கதையில் நடிப்புப் புலவர் K. R. ராமசாமி அவர்கள் காளி கோயிலில் "இன்னமும் பராமுகமேனம்மா" என்று சோகந்ததும்பப் பாடி; திறம்படப் பேசி; மெய் சிலிர்க்க நடிக்கும் கட்டம் எவர் உள்ளத்தையும் கலங்கச் செய்யும் என்பதில் எவர்க்கும் கருத்துவேற்றுமை இருக்காது. திரு. T. S. பாலையா அவர்கள் தோற்றத்திலும் நடிப்பிலும் இதற்கு

நடிகர்கள் :

K. R. ராமசாமி

T. S. பாலையா

D. பாலசுப்ரமணியம்

M N. நம்பியார்

மற்றும் பலர்.

நடிகைகள் :

M. V. ராஜம்மா

V. N. ஜானகி

M. S. பாக்கியம்

அங்கமுத்து

மற்றும் சிலர்.

முன் நடித்த பல படங்களைக் காட்டிலும் இப்படத்தில்தான் தலைசிறந்து விளங்குகிருரெனத் துணிந்து கூறலாம். பாலசுப்ரமணியமவர்கள் வேதாசல முதலியாராகத் தாம் தாங்கி நிற்கும் பாகத்தை நன்குணர்ந்து செவ்வனே நடித்துள்ளார். நம்பியார் வேதாசல முதலியார் மகனாக நடிக்கிருரெனக் கூற இடமில்லாது வேதாசல முதலியார் மகன்தானே நம்பியார் எனச் சொல்லத்தகுமளவில் திறம்பட நடித்துள்ளார்.

திருமதி. M.V. ராஜம்மா அமிர்தமாயும் சுகிர்தமாயும் நடிக்கும் பாகங்கள் நன்ருகவே அமைந்துள்ளன. திருமதி. V.N. ஜானகி ராஜம்மாவைவிட நன்ருக நடித்துள்ளார். நடனம்; லலிதா-பத்மினி, மேனாட்டு நடன முறையைக் கையாண்டு சிறந்த நடனம் ஆடியுள்ளார்.

திரு A. S. A. சாமி அவர்கள் அரும்பாடுபட்டு இக் கதையை திரைப்படமாக்கப் பாடுபட்டிருக்கிருர். A. S. A. சாமி அவர்களின் அரிய கஷ்ட உழைப்புத்தான் இப்படத்தின் வெற்றிக்குக் காரணமாகும்.

அண்ணு அவர்களின் அரிய கருத்து! திறமை சேர்ந்த நடிகர்களின் ஒத்துழைப்பு!! டைரக்டர் A. S. A. சாமியின் அரிய முயற்சி!!! இப்படம் நன்கிருக்க வேண்டுமென பணத்தை ஏராளமாகச் செலவு செய்த ஜுபிடரின் தயாரிப்பு!!!! மற்றும் சம்பந்தப்பட்ட பல கலைஞர்களின் ஒத்துழைப்பு—இத்தனையும் சேர்ந்து உருவான வேலைக்காரி காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தந்திட ஊர்தோறுமுள்ள வெள்ளித்திரைக்கு வருகிருள் அண்மையிலென்ருல் எவர் மனம்தான் குதூகலிக்காது.

புதிய இங்கிலீஷ் மருந்து ஷாப்

V. சுப்பிரமணியம் & கோ.,

(Dispensing Chemists & Druggists)

கோவை ராஜ வீதி 249-ம் நெ. கட்டிடத்தில்
(முனிசிபல் புது மார்க்கெட்டுக்கு எதிரில்)
ஆரம்பித்துள்ளோம்.

எல்லாவித இங்கிலீஷ் மருந்துகளும், பிஸ்கெட் ரகங்களும் சரசமான விலையில் கிடைக்கும்.

அனைவருடைய அன்பையும் ஆதரவையும் கோருகிருேம்.

ஜுபிடரின் வேலைக்காரியில்

M. V. ராஜம்மா

ஜுபிடரின் வேலைக்காரியில்

V. N. ஜானகி

நல்லதம்பி

விமர்சனம்.

(ஆ—ர்.)

வெளியிட்டவர் :	N. S. K. பிலிம்ஸ் & உமா பிக்சர்ஸ் தயாரிப்பு.
கதை வசனம் :	அறிஞர் அண்ணாத்துரை M.A.,
பாட்டு :	உடுமலே நாராயண கவி; K. P. காமாக்ஷி.
நடிகர்கள் :	கிருஷ்ணன், மதுரம், சகஸ்ர நாமம், பானுமதி மற்றும் பலர்.
டைரக்ஷன் :	கிருஷ்ணன் பஞ்சு
ஸ்டுடியோ :	நியூடோன்.

4-2-49 காலை 9-30 மணிக்கு நல்ல தம்பி ஆரம்பவிழா பத்திரிக்கைக்காரர்களுக்கும், பிரபலஸ்தர்களுக்கும் விசேஷ அழைப்பிதழ் அனுப்பிப் படம் காட்டப்பட்டது.

நல்ல தம்பியைச் சிருஷ்டி செய்த அறிஞர் அண்ணு அவர்களை புகழ்வதா? அறிஞர் அண்ணு அவர்கள் அமைத்த கதைப்பூங்காவிலே களிநடம் செய்யும் நடிகை - நடிகர்களை போற்றுவதா? செவித்தேன் பிலிற்றும் செந்தமிழ் இசைப்பதமலர்களின் அருமை மணத்தை நுகர்ந்து இறுமாப்பெய்துவதா? பல திறப்பட்ட கலைஞர்கள் கூட்டத்திறனேடமைந்த வேலியின் கண் காணிப்பைக் கண்டு பெருமையுறுவதா?

நல்ல தம்பி நாட்டிற்கு தேவையானவற்றை அள்ளித்தரும் தங்கக் கம்பி! ஈரோட்டுப் பாசறையில் முகிழ்த்த கருத்துக்கள் காஞ்சிக் கலைவாணனின் கையிலேறிநாஞ்சில் நாட்டு நடிகமணியிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு இன்றைய சீர்திருத்த முன்னேற்றத்திற்கு ஆக்கம் தரும் விதத்திலே படம் அமைந்துள்ளது. போற்றற்குரியது; கடனறிந்தாற்றியது. அறிஞர் அண்ணுவின் முற்போக்கான கருத்துக்கள் தாங்கிய படம் பார்ப்பரெவரையும்படமெடுத்தாட வைக்கும் பாணியிலமைந்துள்ளது. நகைச்சுவை கிருஷ்ணன் நல்ல தம்பியாக நடிக்கிருர். உள்ளத்தை அள்ளும்வகையிலே அவர் நடிப்பு நின்றதா? சிந்தனையில் கிளரும் வகையில் தான் நடித்தாரா? என்ருல் சமூகத்தை மாற்றியமைக்கும் வகையிலே உணர்ந்து நல்ல தம்பியெனவே உள்ளவாறு நடித்துள்ளார். சகஸ்ரநாமம் பால்முனி போன்று நடித்துள்ளார்! பானுமதி புஷ்பாவாக வருவாரே டியர்என்று பாடுவதும் மற்றும் தாமரை மலரில் தோன்றி பார்ப்பவர் நெஞ்சத் தாமரையில் பொருந்துமளவிற்கு தன் நடிப்பை உயர்த்திக் கொண்டார் இப்படத்தின் மூலம், மதுரத்தின்

மதுரமான மொழியும் கவர்ச்சிகர மான நடிப்பும் உன்னதம் வாய்ந் தவை, கிராமிய சீர்திருத்தத்திற்கு இந்தியாவிலே இந்தப்படம் தான் முதன் முதலாக வழி காட்டி யெனத்துணிந்தே சொல்லலாம். அர சாங்கம் இந்தப்படத்தை தனக்குச் சொந்தமாக்கி பெரும் நகரத்திலி ருந்து சிற்றூர்வரை காண்பிக்க வேண்டும். கிராம சீர்திருத்த பிர சாரமாக அமைந்த இப்படம் தமிழ் நாட்டின் மூலமுடுக்குக்கெல்லாம் காட்டப்பட வேண்டும் அரசாங்கத் தாரென்பது நம் விழைவு.

கொங்கு நாட்டுக் கவிஞர் நாரயண கவியவர்களின் ஆறென ஓடும் இசைப்பதங்கள் கருத்துமி குந்து செவிக்கின்பம் பயக்கின்றன. தமிழ்நாட்டின் தலைசிறந்த நடிகமணி கிருஷ்ணன் உண்டு! அறிவுரை யை அழகுத்தமிழலே அள்ளித்தரும் அண்ணாவின் எழுத்துண்டு! செவிக்கின்பம் தரும் செந்தமிழ் இசைப்பதமமைக்கும் நாராயண கவியின் நற்பதங்களுண்டு! திறம் சால் பல நடிகநடிகைகளுண்டு நல்ல தம்பி படத்தில். புது உலகம் பூக்கும் வகையிலே கலை உலகத் தைத் திருப்பிச் செல்லும் கலைஞர் களின் அரிய முயற்சியில் அரும்பிய நல்லதம்பிபோன்ற படங்கள்வேண் டும்! நல்லதம்பி படம் பொழுது போக்கிற்காக அமைந்ததில்லை. தீப்பொறியென எழுந்துத் தேய்ந்த சமூகத்தைப் புதுப்பிக்கவந்த அரும் படமென எவரும் துணிந்து கூறு வார். அதிகம் கூறின் மிகைப் படுத்தியதாகும். கலைஞர்கள் வாழ்க! அக்கலைஞர்கள் அளிக்கும் கலைச்செல்வம் பல்கிப்பெருகுக.

கட்டிட மாற்றம்.

(முன்பு இருந்த கட்டிடத்திற்கு கிழபுரம் சாரதா ஜவுளிக்கடை கட்டிடத்தில்)

ஸி. ஆர். ஆர்.

இங்கிலீஷ் பிரிபரேடரி ஸகூல்

74 ராஜவீதி, கோயமுத்தூர்.

ஸ்தாபிதம் 1935.)

சகோதர சகோதரிகளே!

நம் பாரத மக்களின் கல்வியின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைக்க சித்தமாயிருக்கிறோம்.

தமிழில் தேர்ச்சியுள்ள ஆண்—பெண் குழந்தைகளை ஒரே வருஷத்தில் ஹிந்தி, தமிழ், கணக்கு, இங்கிலீஷ், சரித்திரம் முதலிய பாடங்களை கற்பித்து (III Form) 8-ம் வகுப்பு வரை யில் ஹைஸ்கூலில் ஒவ்வொரு வருஷமும் சேர்த்து வருகிறோம்.

ஆண்—பெண் குழந்தைகளுக்கு திறமை வாய்ந்த உபாத் தினிகளைக்கொண்டு குறைந்தகாலத்தில் நிறைந்த கல்வி கற்பித்து வருகிறோம்.

வெளியூர் குழந்தைகளுக்கு (ஹாஸ்டல்) இடம், ஆகாரம் வசதிகள் செய்திருக்கிறோம்.

N. B:- ஸ்பெஷல் வகுப்புகளில் ஹிந்தி கற்பிக்கப்படும். 15 வரு ஷங்களுக்கு மேற்பட்ட ஆண், பெண்களுக்கு (8-வது வகுப்பு பரீட்சை) ஈ. எஸ். எல். ஸி. பரீட்சைக்கு பிரைவேட்டாக செல் பவர்களுக்கு, எல்லா பாடங்களை இரவு பாடசாலையிலும், விடு முறை நாட்களிலும் கற்பிக்கப்படும்.

Telephone: 2894 Grams: "EVEREST"

HOTEL EVEREST

(PROPRIETOR: S. K. SUNDARAM J. P.)

1 & 2, POONAMALLEE HIGH ROAD, MADRAS 3

MOUNT EVEREST
The Peak of Perfections

HOTEL EVEREST
The Perfect Boarding & Lodging House

Situated between Madras Central & Egmore Station and on Bus, Tram, Electric Train Route. Well Ventilated 130 Airy Rooms.

Our Branch:

Luxury Type HOTEL D' MADRAS

எமது புதுவருஷ வாழ்த்துக்கள்

:o:

எங்களிடம், கட்டிடங்களுக்கு வேண்டிய
சகலவிதமான இருப்புச் சாமான்களும்
ஷாலிமார் J. & N. குட்லஸ்வால் கம்பெனி
களின் பெயின்ட் தினுசுகளும், மத்ருஸ்
S. குப்புசாமி & கம்பெனியாரால் தயார்
செய்யப்படும், பிகறல், பிரஞ்சு பாலிஷ்
களும் விலை சரசமாகக் கிடைக்கும்

எம். எஸ் மாணிக்கம் & கோ.

இரும்பு — பெயின்ட் வியாபாரம்
மில் ரோடு :: கோயமுத்தூர்.

மதருஸ் ஆபீஸ்
28, வெங்கிடாசல முதலி வீதி
பார்க் டவுன் மதருஸ்.

மதுரை ஆபீஸ்
29, கீழமாசி வீதி,
மதுரை.

Telegrams: VINEGAR. Phone No. 3181.

M. S. MANICKAM (Madras) & Co.,

PAINTS & HARDWARE MERCHANTS,
P. T. MADRAS.

Dealers, in all kinds of Building Materials, & Paints, Varnishes, Enamels, etc. at a very competetive Rates.

Proprietors: { M. S. MANICKAM PILLAI
S. KUPPUSAMY MUDALIAR

தென்னிந்தியாவில் புகழ்பெற்ற

பல்லடம் குயில் மார்க் பீடிகள்

உபயோகத்திற்கு உகந்தது
குணத்தில் சிறந்தது
குயில் மார்க்கென
கூவு குயிலே

குணத்திலும் சுவையிலும்

மணத்திலும் சிறந்தது.

Pro:- P. A. ரஹீம் சாயபு,
பல்லடம்.

ஏஜண்டு:- K. அய்யாசாமி செட்டியார் திருப்பூர்.
அமீர் சாயபு, உடுமலைப்பேட்டை.
K. மம்முசா சாயபு, காங்கயம்.
S. நடராஜ முதலியார், அவினசி.

பீடிகளின் கோமான் கோபால் மார்க் பீடியே

கோபால்பீடிகள்
TRADE MARK
REGD No 590
ரிஜிஸ்டரான
A.K. அஜீஸ்
கோயமுத்தூர்

குணத்தில் மிகுந்தது
கோபால் பீடி

மணத்தில் சிறந்தது
கோபால் பீடி

ஓர்முறை அவசியம் வாங்கி
பரீக்ஷித்துப்பாருங்கள்.

உரிமையாளர் :- A. K. அஜீஸ் சாயபு.
கோபால் மார்க் பீடி பேக்டரி,
மங்கலம் ரோடு, பல்லடம்.

பிராஞ்சு : செவ்வாய்பேட்டை, சேலம்.

ஏஜண்டுகள் :—
ஜனாப் K. தஸ்தகீர் சாயபு, தாராபுரம்.
ஜனாப் K. முஹமத்சா சாயபு, காங்கயம்.
ஜனாப் P. N. பீர் முஹமத் சாயபு, பழனி.

காலை, மாலை சிற்றுண்டியும்
நல்ல முறையில்
பிரியாணியும்

வெல்கம் பிரியாணி ஓட்டல்,
கடைவீதி, சூலூர்.

சுவைதரும் உணவும், சுத்த
மான பதார்த்தங்களும் நாவிற்
கினிய முறையில் நாங்கள் தருகிறோம்.

Pro:- P. S. S. செட்டியார்.

மங்களகரமான பொங்கல் வாழ்த்து!

உயர்ந்த புகைப்படங்கள்,

என்லார்ஜ்மெண்டுகள்

இன்னும் போட்டோ சம்பந்தமான சகலவற்றிக்கும் சிறந்த இடம்

பிரின்ஸ் ஸ்டுடியோ

அவினாசி ரோடு, கோயமுத்தூர்.

போட்டோ சாமான்களும் கிடைக்கும்.

ஓர்முறை விஜயம் செய்யுங்கள்.

Pro:- K. M. ரங்கநாதன்.

காரல், கசப்பு இல்லாததும், குணம், மணம் நிறைந்ததுமான எங்கும் புகழ்பெற்ற

நரி மார்க்

சுபஹான்

பீடிகளை கவனித்து வாங்குங்கள்.

Regd. No. 4351.

P. M. சுபஹான் சாயபு, பல்லடம்.

ஏஜண்டுகள்:—

P. A. K. சோமசுந்தரம் செட்டியார், மளிகை, பல்லடம்.
பாவ்ஜான் சாயபு, பல்லடம்.
S. சையத் ரசூல் சாயபு, பல்லடம்.
A. அங்கணத் தேவர், இருகூர்.

உண்மை !

நம்பிக்கை !!

நாணயம் !!!

இவைகளுக்கு ஏற்ற இடம்

கிருஷ்ண கிளாத் ஷாப்,

பெரியகடைவீதி,

கோயமுத்தூர்.

உரிமையாளர்கள் :

K. கிருஷ்ணசாமி, V. M. கிருஷ்ணசாமி.

மைசூர் பிரியாணி & சாப்பாடு ஓட்டல்,

பெரியகடை வீதி; கோவை.

அகில இந்திய சோஷியலிஸ்ட் தலைவர் ஸ்ரீஜத் ஜெயப்பிரகாஷ் நாராயணனல் போற்றிப் புகழப்பட்ட ஒப்பற்ற உணவு விடுதி.

நாவிற்கு ருசி ! நல்ல மணமுள்ள பதார்த்தம் !!

சுகாதார முறைப்படி தேன் சுவைதரும் உணவுகள்.

இவற்றிற்குப் புகழ்வாய்ந்த இணையிலா உணவு விடுதி.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்.

உரிமையாளர்கள் :— R. N. G. & G. P. R.

சாரதா விலாஸ் காப்பி ஓட்டல்,

— சூலூர் —

நாவிற்கு ருசியும், மனதிற்கு திருப்தியும் அளிக்கவல்ல தித்திப்பு, காரம் போன்ற எல்லாவிதமான பலகாரங்களும் நெய்யினுல் தயார் செய்கிரேும்.

சுத்தமாகவும், சுவை மிகுந்தவையாயும் தயாரிக்கிரேும். டி பார்ட்டி போன்ற பெரிய ஆர்டர்களை குறிப்பிட்ட காலத்தில் செய்துகொடுப்போம்.

உரிமையாளர் : *V. ரத்தினம் ஐயர்.*

Edited & Published by S. P. Meenakshi Ammal, Sulur.
Printed by Sri. Kathiresan Press, Coimbatore.
Mg. Editor: S. A. Manickam.

தி

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபிதம்: 1906 / / தலைமை காரியாலயம்: சென்னை

இந்தியாவிலுள்ள தலைசிறந்த அஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் யுனைடெட் இந்தியாவும் ஒன்று.

42 வருடங்களுக்கு மேல் தங்கள் பாலிஸிதாரர்களுக்கு நன்கு பணியாற்றி வரும் சிறந்த ஸ்தாபனம்.

1947-ம் வருஷத்திய கணக்குகளின்படி ரூ. 19,33,72,576 மேல் மதிப்புள்ள பாலிஸிகளுடைய கம்பெனி.

1947-ம் வருஷத்தில் மட்டும் ரூ. 4,06,59,535 மேல் மதிப்புள்ள பாலிஸிகள் வழங்கப்பட்டன.

1947-ம் வருத்தில் பிரிமிய வருமானம் மட்டும் ரூ. 1,01,50,237 மேல்.

இதுவரை ரூ. 1,53,46,163 மேல் பாலிஸிதாரர்களுக்கு, அவர்கள் பாலிஸிகள் காலாவதியாகியும், அல்லது அவர்களுக்கு மரணமேற்பட்டும், கணக்குகள் தீர்க்கப்பட்டு, பணம் வழங்கப்பட்டது.

மேலே கூறியுள்ள விபரங்கள் கம்பெனியின் நிரந்தரத்தைப் பற்றி நன்கு விளக்கும்.

அனுபவமும் திறமையும் வாய்ந்த ஏஜண்டுகளுக்கு தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு எழுதவும்.

கோவை கிளை காரியாலயம்.

5/34, அவனுசி ரோடு, :: கோயமுத்தூர்.

KOVAI MURASU Regd. No. M 5064

தந்தி: ராஜா.

சுவர்ண மாளிகை

போன்
268

தபால்பெட்டி
139.

பி.ஏ. ராஜூ செட்டியார் & பிரதர்

வைர வியாபாரிகள்

கோயமுத்தூர்

ஸ்ரீ கதிரேசன் அச்சகம், கோவை.